# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 2 3 4 1 1

வள்ளுவர் ஆண்டு 2002, மார்கழி 25 உ. (9-1-72) ஞாயிறு 1391 துல்கஃதா 21 புத்தகம் 25 இதழ் 7


# தமிழினத்துக்கு மரண அடி!

## புதிய அரசியல் திட்டத்தில் தமிழின உரிமைகள் புறக்கணிப்பு!

**அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவினால் தயாரிக்கப்பட்டு சிங்கள அரசியல் நிர்ணய சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்புத் திட்டம் இந்நாட்டின் இரண்டாவது பெரிய தேசிய இனமான தமிழினத்துக்கு மரண அடியாக அமைந்துள்ளது.**

தமிழ் தேசிய இனத்தின் அபிலாஷைகளுக்கு முரணாக—தமிழினத்தின் அடிப்படைமொழி உரிமைகளைப்புறக்கணித்து—தனிச் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியக் குடியரசின் மீளா அடிமைகளாக—நிரந்தர இரண்டாந்தரப் பிரஜைகளாக தமிழ் மக்களை புதிய அரசியலமைப்பு ஆக்கியுள்ளதென்று தமிழ் அரசியல் தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

''அரசியலமைப்பு வரைவு அடிப்படைத் தீர்மானங்களுக்கு தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் சம்பந்தமாக கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் ஒன்று கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதனால் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறி அச்சபையை பகிஷ்கரித்து வருகிறோம். எம்மால் நிராகரிக்கப்பட்ட அதே அடிப்படைத் தீர்மானங்களின் மீதுதான் புதிய அரசியலமைப்பு திட்டம் வரையப்பட்டிருக்கிறது. எனவே இந்நிலையில் மீண்டும் அரசியல் நிர்ணய சபைக்கு நாம் செல்வது என்ற பேச்சுக்கே இடமில்லை''—இவ்வாறு தமிழரசு பா. உ. ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

புதிய அரசியல் திட்டத்தில் தமிழ் மொழியின் அந்தஸ்து தெளிவாக்கப்படவில்லை — பெரும்பான்மை தமிழ் பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆட்சி மொழி, நிர்வாகமொழி, நீதிமன்ற மொழி தமிழ் என்பது திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை. சிங்களம் மட்டும் சட்டமே உறுதியாக நிலைநாட்டப்பட்டிருக்கிறது—

புதிய அரசியல் திட்டத்தில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட—தமிழ் மக்களைப் பாதிக்கின்ற குறிப்பிடத்தக்க அம்சங்கள் வருமாறு:—

(2-ம் பக்கம் பார்க்க)

## வாழிய வங்கச் சிங்கம்!

விடுதலை பெற்ற வங்க நாட்டின் ஈடிணையற்ற பெருந்தலைவன் ஷேக் முஜிபுர் ரகுமானை சிறையிலிருந்து விரைவில் விடுதலை செய்யவிருப்பதாக மேற்கு பாகிஸ்தான் ஜனாதிபதி பூட்டோ அறிவித்துள்ளார்; இந்தியாவுடன் நட்பை வளர்க்க விரும்புவதாகவும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகவும் பூட்டோ கூறியிருக்கிறார். பூட்டோவின் இந்த மனமாற்றத்தை வரவேற்கிறோம். பங்களாதேசையும் பூட்டோ விரைவில் அங்கீகரிப்பாரானால், அவரை புத்திசாலி என்று மெச்சலாம்;

விடுதலை பெற்ற வங்கத்திருநாட்டுக்கு சுதந்திர வீரராக மீண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்று வங்க மக்களை வழிநடாத்தவிருக்கும் தியாகப் பெருந்தலைவன் விடுதலை வீரர் — ரகுமான் அவர்களை வாழ்க வாழ்க என வாழ்த்துகிறோம் —

# 'தமிழ்மக்களின் அபிலாஷைகள் அனைத்தும் நிராகரிப்பு!

## தமிழரசுத் தந்தை கருத்து!

''இந் நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகள் அனைத்தும் புதிய அரசியலமைப்பில் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் பேசும் இனத்தின் மொழியுரிமையும் மற்றும் அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டிருக்கின்றன.

''தமிழ் மக்களின் பெரும்பான்மையான பிரதிநிதிகளால் நிராகரிக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவு அடிப்படைத் தீர்மானங்களின்படியேதான் புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டிருக்கிறது: இந்நாடு பௌத்த சிங்களவர்களுக்கே சொந்தம்—அவர்களே இந்நாட்டின் ஏகபோக எஜமானர்கள் என்னும் நினைப்பில் புதிய அரசியலமைப்பு எழுந்திருக்கிறது.

''தமிழ் இனத்தை நிரந்தர அடிமையாக்கி—இரண்டாந்தர இனமாக்கி—காலப்போக்கில் அழித்தொழித்து விடுவதே புதிய அரசியலமைப்பை கொண்டு வந்தவர்களின் அந்தரங்க நோக்கம்;

''புதிய அரசியலமைப்பை தனிச் சிங்கள பௌத்த ஒற்றையாட்சி அமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை அங்கீகரிக்க முற்றாக மறுத்துள்ளதன் மூலம், புதிய அரசிய

(2-ம் பக்கம் பார்க்க)



# 'இந்தியாவின் முதுகில் குத்திவிட்டது இலங்கை'

## சிலம்புச் செல்வரின் சீற்றம்!

'இந்தியாவின் அண்டை நாடு இலங்கை. ஆம்; தாயும் சேயும் போன்றவை இந்தியாவும் இலங்கையும். இலங்கையை வளப்படுத்த உழைத்தவர்கள் இந்தியர்களே! உழைத்தவர்களென்ன, இன்னமும் உழைத்து வருகின்றனர் இலங்கையிலுள்ள இந்தியர்கள்!

'அண்மையில் இலங்கை அராஜகத்தில் மூழ்கி அழிய இருந்தபோது, பலவகையிலும் உதவி இலங்கையைக் காத்தது இந்தியா.

'இலங்கையோடு தனக் கேற்பட்ட பிரச்சினைகளை—தானே நஷ்டப்படும் வகையில்—பேசித் தீர்த்துக் கொண்டு வந்திருக்கிறது இந்தியா. சாஸ்திரி — பண்டாரநாயக்கா ஒப்பந்தமே சான்று.

'இவ்வளவு நல்ல முறையில் தொன்றுதொட்டு இன்றுவரை உறவு இருந்தும், ஐ. நா. மன்றத்தில் இந்தியாவுக்கு எதிராக வந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்து, இந்தியாவின் முதுகில் குத்திவிட்டது இலங்கை. வருங்கால சரித்திராசிரியர்கள் இலங்கையின்செயலை 'துரோகம்' என்றே வருணித்து எழுதுவார்கள்;

'பாகிஸ்தானைப் படைத்த பிரிட்டனே நடுநிலைமை வகித்தது; அரபு நாடுகளில் ஒன்றான ஏமன் கூட நடுநிலைமை வகித்தது. சீனாவின் பால் அச்சங்கொண்டுள்ள நேபாளம் கூட தீர்மானத்திற்கு ஆதரவாக ஓட்டுப் போடவில்லை. ஆனால் இந்தியத் தாயின் திருவடிக்கருகி

(11ம் பக்கம் பார்க்க)

## புதிய தலைவர் தேர்தல்

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் பதவிக்கு திரு. அ. அமிர்தலிங்கம், திரு. இராசதுரை ஆகிய இருவரது பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன; இந்த இருவரில் ஒருவர் இம்மாதம் 14-ம் திகதிக்கு முன் வாபஸ் பெற்றுக் கொள்ளும் பட்சத்தில் கட்சித் தலைவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்படுவார்;

தவறினால், இதற்காக நடைபெறும் கட்சியின் விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் இரகசியவாக்கெடுப்பு மூலம் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். கட்சி வரலாற்றில் இதுவரை தலைமைப்பதவி போட்டியின்றி ஏகமனதாகவே தெரிவு செய்யப்பட்டு வந்திருக்கிறது.

## வங்கதேச வெற்றி விழா!

வங்க மக்களின் விடுதலைப் போராட்ட வெற்றியை கொண்டாடும் வகையில் 8-1-72 சனிக்கிழமை மாலை யாழ் மாநகர சபை மண்டபத்தில் பொதுக் கூட்டமொன்றை இலங்கைத் தமிழரசுக் கட்சி நடத்துகிறது.

இக் கூட்டத்துக்கு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தலைமை தாங்குகிறார். கூட்டத்தில் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட வடக்கு, கிழக்கு மாகாண பா. உ.க்களும், கட்சிப் பிரமுகர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

# கட்சித்தலைவர் பதவி; தினபதியின் கட்டுக்கதைக்கு தமிழரசுத் தந்தை மறுப்பு

திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசு மாநாடு ஒன்றின் போது திரு. இராசதுரைக்கு தலைவர் பதவி வழங்கப்படுமென்று தமிழரசுத் தந்தை உறுதியளித்ததாகவும், இப்போது அந்த உறுதி மொழியை அவர் மீறி நேர்மை தவறி விட்டதாகவும், தமிழரசுக் கட்சிக்குள் பிளவுண்டாக்குவதற்காக தினபதி ஒரு திட்டமிட்ட பொய்ப்பிரசாரத்தை மேற்கொண்டுவருகிறது;

தினபதி இப்படிக் கூறுவது உண்மையா என்று தமிழரசுத் தந்தையிடம் நாம் கேட்டபோது, தாம் அப்படி எவருக்கும் எந்த உறுதிமொழியையும் அளிக்கவில்லையென்று தந்தை திட்டவட்டமாகத் தெரிவித்தார்;

திருகோணமலை மாநாடு நடைபெற்ற பின்னர், அடுத்து மன்னாரிலும், உடுவிலிலுமாக இரண்டு மாநாடுகள் நடைபெற்று முடிந்து விட்டன. இப்போதுதான் திருகோணமலை வாக்குறுதியென்று பச்சைப் பொய் ஒன்றைக் கிளப்பி கட்சியை பிளக்கலாமென்று கனவு காணுகிறார் தினபதியார்;

தினபதியார் மூட்டும் நஞ்சில் திரு. இராசதுரையோ, தமிழரசுக் கட்சியிலுள்ள வேறு எவருமோ நிச்சயமாக சிக்கமாட்டார்கள் என்று தமிழ் மக்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

# தமிழ்த்தாயின் பெயரால் மன்றாடிக் கேட்கிறோம்!

இலங்கையின் புதிய அரசியலமைப்பின் நகல் திட்டத்தை அரசியல் நிர்ணய சபையில் அரசியலமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இறுதியாக சமர்ப்பித்து விட்டார். இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பெரும்பான்மைத் தமிழ் பிரதிநிதிகளை உள்ளடக்காத சிங்கள அரசியல் நிர்ணய சபையும் அதை அப்படியே அங்கீகரித்து விட்டது.

எந்த எந்த அரசியலமைப்பு வரைவு அடிப்படைத் தீர்மானங்கள் இந்நாட்டுத் தமிழ் தேசிய இனத்துக்கு படுபாதகமானவையென்று தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகள் அன்று அரசியல் நிர்ணய சபையில் சுட்டிக்காட்டி எதிர்த்தார்களோ, அதே வரைவு அடிப்படைத் தீர்மானங்களின் மீது தான்—எந்தவித மாற்றமுமின்றி புதிய அரசியல் திட்டம் வரையப்பட்டிருக்கிறது.

புதிய அரசியலமைப்பு திட்டத்தின்படி இந்நாட்டுச் சிங்கள பௌத்தர்களின் உரிமைகள் சலுகைகள் அனைத்தும் ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கும் அதே நேரத்தில் தமிழ் பேசும் இனத்தின் அடிப்படை உரிமைகள் எதுவுமே அங்கீகரிக்கப்படவில்லை.

புதிய அரசியலமைப்புத் திட்டத்தின்படி,

சிங்கள இனத்தை நிரந்தர ஆளும் இனமாகவும், தமிழ் பேசும் இனத்தை நிரந்தர ஆளப்படும் இனமாகவும் என்றென்றும் வைத்திருக்கும் ஒற்றையாட்சி அரசியலமைப்பு மீண்டும் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் கடந்த பதினைந்து ஆண்டுகளாக தொடர்ச்சியாக விடுத்துவரும் சனநாயக பூர்வமான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. 'Self Determination' என்ற தமிழ் பேசும் இனத்தின் அடிப்படை உரிமையை மறுத்து தமிழ் பேசும் மக்களை நிரந்தர அடிமைகளாக வைத்துக்கொள்ளும் சதித்திட்டம் இது!

சிங்களம் மட்டுமே நாட்டின் ஏகபோக ஆட்சி மொழியாக இருக்கப்போகிறது. தமிழ் மொழி, தமிழ் பேசும் மக்களின் நிர்வாக மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இருக்கவேண்டும் என்கின்ற தமிழ்த்தேசிய இனத்தின் அபிலாஷை — அடிப்படை மொழி உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது.

பௌத்தம் மட்டுமே அரசின் விசேட கவனிப்பையும் சலுகைகளையும் பெறவிருக்கிறது. ஏனைய இந்து, இஸ்லாமிய, கிறித்துவ மதங்களுக்கு பௌத்தத்துக்கு வழங்கப்படும் அதேயளவு உரிமையும், சலுகையும் வழங்கப்படமாட்டாது.

இலங்கையடங்கிலும் சிங்களமே நீதிமன்ற நிர்வாக — பதிவுமொழியாக இருக்கப் போகிறது. வருங்காலத்தில் தேசியசபை விரும்பினால் மட்டும் வடக்கு, கிழக்கு மாகாண நீதிமன்றங்களைப் பொறுத்தவரை வேறு ஏற்பாடுகள் செய்யலாமாம்!

இது வெறும் ஏமாற்று வித்தை — சிங்களத்தின் நீதிமொழி அந்தஸ்தை திட்டவட்டமாக சட்டத்தில் வரையறுத்துக் கூறியவர்கள் தமிழ் மொழியின் அந்தஸ்தை தீர்மானிக்கும் பொறுப்பை வருங்கால தேசிய சபையின் பொறுப்பில் ஏன் விடவேண்டும்? வருங்கால தேசியசபை விரும்பினால் மட்டுமே வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களில் தமிழ் நிர்வாக, பதிவு மொழியாகும். விரும்பாவிட்டால் தனிச் சிங்களமே அங்கும் திணிக்கப்படும்.

தமிழ் மொழிக்கு ஏதோ உரிமை கொடுத்திருப்பதாக ஊருலகுக்குக் காட்ட 1958-ம் ஆண்டின் தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தைச் சேர்த்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் தமிழ் பேசும் மக்களால் நிராகரிக்கப்பட்ட சட்டம். தமிழ் பிரதிநிதிகளை சிறையிலடைத்துவிட்டு, அவர்களது சம்மதத்தைப் பெறாமல், காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா தமது விருப்பப்படி கொண்டுவந்து நிறைவேற்றிய சட்டம்.

தமிழ் மொழிக்கு எந்தெந்த உரிமைகள் இருக்கவேண்டுமென்பதை சிங்கள அரசே தன்னிஷ்டத்துக்கு முடிவு செய்து நிறைவேற்றிய மேற்படி சட்டத்தை தமிழ் மக்கள் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஓர் இனத்தின் உரிமைகளைப் பற்றி மற்றோர் இனமா முடிவு செய்வது?

1958-ம் ஆண்டு தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம் தமிழ் மக்களை இந் நாட்டில் இரண்டாந்தர இனமாக்க வழி செய்திருக்கிறதேதவிர, தமிழ் மொழியின் உரிமைகளை ஒரு சிறிதும் வழங்கவில்லை. அப்படி வழங்கியிருக்குமானால் ஆங்கிலம் தெரிந்த தமிழர், தமிழில் கடிதம் எழுதினால் நான் தமிழில் பதில் எழுதமாட்டேன்; ஆங்கிலத்தில்தான் எழுதுவேன்; என்று நாடாளுமன்றத்தில் மமதை பிடித்து பேசியிருப்பாரா பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா?

எனவே 1958-ம் ஆண்டுத் தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தை வைத்துக்கொண்டு, தமிழ் மக்களின் மொழி உரிமைகளை வழங்கிவிட்டதாக சிங்கள அரசு உலகின் கண்களில் மண்ணைத் தூவிவிட முடியாது.

புதிய அரசியலமைப்பு திட்டத்தில் சட்டங்கள் அனைத்தும் சிங்களத்தில் ஆக்கப்படுமென்றும் அவற்றின் மொழி பெயர்ப்பு தமிழில் தரப்படுமென்றும் கூறப்பட்டுள்ளது.

இதுவும் தமிழ் மொழியின் அடிமை நிலையையே பிரதிபலித்திருக்கிறது. 'மொழி பெயர்ப்பு' ஒரு போதுமே மூலமாகாது என்பதை டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவே ஒரு முறை அரசியல் நிர்ணய சபையில் எடுத்துக்காட்டியிருக்கிறார்! தனது சொந்த நாட்டிலேயே மொழி பெயர்ப்பை ஏற்றுக்கொள்வது தமிழ் இனத்தின் தன்மானத்துக்கு இழுக்காகும்!

முடிவாகக் கூறுமிடத்து—புதிய அரசியலமைப்பு திட்டம் தமிழ் பேசும் இனத்தின் மரண வோலையாகவே காட்சிதருகிறது. சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம் இந் நாட்டுத் தமிழ் தேசிய இனத்தை பூண்டோடு அழிக்க வழிவகுத்துள்ளது புதிய அரசியலமைப்புத் திட்டம். இந்த திட்டத்தை ஆதரிப்பவன் எவனேயும் வருங்காலத் தமிழ் மக்கள் பச்சைத்துரோகி என்று நிச்சயம் சபிக்கப்போகிறார்கள்!

எனவே, அரசியல் நிர்ணய சபையில் தொடர்ந்தும் அங்கம் வகித்துவரும் தமிழ் பிரதிநிதிகளை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறோம். நமக்குள் ஆயிரம் கருத்து வேற்றுமைகள் இருப்பினும் தமிழின் பெயரால் அவற்றை மறப்போம்—தமிழினத்துக்கு குழிபறிக்கும் புதிய அரசியலமைப்புத் திட்டத்தை இந்தக் கடைசி நேரத்திலாவது எதிர்க்க துணியுங்கள்! தமிழ் மொழியைத் தாழ்த்தியுள்ள அரசியல் திட்டத்தை—தமிழினத்தை நிரந்தர அடிமைப்படுகுழியில் தள்ளிவிழுத்தும் சதித்திட்டத்தை—தமிழர் அனைவரும் எதிர்க்கிறார்கள் என்பதை உலகெங்கும் உணரவையுங்கள்!

# பல்கலைக்கழகப் பிரச்சினையில் வாக்குறுதி காற்றில் பறந்தது!

தமிழ் பேசும் மக்களுக்கு ஒன்றுக்கு இரண்டு பல்கலைக் கழகங்கள் தரப்போகிறோம்! கிழக்கில் ஒன்றும், வடக்கில் ஒன்றுமாக இரு பல்கலைக் கழகங்களை திறுவப்போகிறோம் என்று வாக்குறுதியளித்து ஆட்சிபீடமேறிய ஐக்கிய முன்னணி அரசு, இப்போது தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டு, இலங்கை முழுவதற்குமாக ஒரேயொரு பல்கலைக் கழகம் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ் மக்களுக்கு தனிப் பல்கலைக் கழகம் அமைத்துத் தரப் போவதாக தேர்தல் சமயத்தில் தம்பட்டமடித்தவர்கள் இன்று கதையை மாற்றிவிட்டார்கள்.

ஆனால் தமிழ் பேசும் மக்களோ—1956-ம் ஆண்டிலிருந்து தங்கள் மொழி, கலாசாரம், தனித்துவத்தை பேணி வளர்க்க தனியொரு தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையில் இன்னும் உறுதியுடனிருந்து வருகிறார்கள். தமிழ் மக்களின் கோரிக்கைக்கு விரோதமாக — இலங்கை யடங்கிற்கும் பொதுவாக ஒரு பல்கலைக் கழகம் அமைப்பது என்னும் கொள்கையை உள்ளடக்கிய பல்கலைக் கழக மசோதாவை எதிர்த்து வாக்களிப்பது என்று தமிழரசுக் கட்சி முடிவுசெய்திருக்கிறது.

ஆனால், ஒரு பல்கலைக் கழகத் திட்டத்தை வரவேற்று ஆதரித்து, அதுவே சிறந்தது என்று பாராட்டிப் பேசியிருக்கிறார் தமிழ் பா. உ. ஒருவர். அவரது பெயர் சி. எக்ஸ் மாட்டின்!

## அடுத்த இதழ்

பொங்கல் இதழாக பல சிறப்புக் கட்டுரைகளைத் தாங்கி உங்கள் கரங்களில் தவழும்.

—ஆர்

## பெரியவர் தொகுதியில்...

தமிழரசுத் தந்தை செல்வா அவர்களின் தொகுதியான காங்கேசன்துறையில் 9-1-72-ல் வங்க தேச வெற்றி விழா தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மு. இராசமாணிக்கம் தலைமையில் நடைபெறுகிறது. தமிழரசுத் தலைவர்கள் பலர் உரையாற்றவிருக்கும் இவ்விழா காங்கேசன்துறை பட்டினசபை மண்டபத்தில் நடைபெறுகிறது.

—

## வங்கமும் இலங்கையும்

புத்தம் புதிய நாடு — இஸ்லாமிய மதத்தவர்கள் பெரும்பான்மையினராக வாழும் நாடு — பங்களாதேஷ்! ஆனாலும், அந்தநாடு தன்னை மதசார்பற்ற நாடு என்று பிரகடனப் படுத்திக் கொண்டிருக்கிறது.

இலங்கையோ, ஒரு பக்கம் சோசலிசம் பேசிக்கொண்டு மறுபக்கம் தன்னை ஒரு மதசார்புள்ள — பௌத்த நாடு என்று புதிய அரசியலமைப்பில் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறது! வங்கத்து மக்களுக்குள்ள அரசியல் மதிநுட்பம் வங்கத்திலிருந்து இங்குவந்து குடியேறியவர்களிடம் மழுங்கிவிட்டதா? வெட்கம்! வெட்கம்!!

—

## பொங்கல் விழா

கல்வி, கலை, கலாச்சாரக் காப்புக் கழகத்தினர், இவ்வாண்டும் மிகச் சிறந்த முறையில், கழகத் தலைவர் திரு. சி. நாகராசா அவர்கள் தலைமையில் பொங்கல் விழாவை யாழ்ப்பாணத்திலே கொண்டாட ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். மேற்படி விழாவில் இசை நிகழ்ச்சி, சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

## தமிழினத்துக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றையாட்சி

(1) இலங்கைக் குடியரசு ஒற்றையாட்சிக் குடியரசு ஆகும்.

பௌத்தத்துக்கு தனிமதிப்பு

(2) "இலங்கை குடியரசில் பெரும்பான்மை மக்களின் சமயமான பௌத்த மதத்துக்கு அதற்குரிய இடம் வழங்கப்படல் வேண்டும். 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியினால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எல்லாச் சமயங்களுக்கும் உறுதியளிக்கும் அதே நேரத்தில் பௌத்த மதத்தை பேணி வளர்த்தலும் பாதுகாத்தலும் அரசின் கடமையாதலும் வேண்டும்"

சிங்களம் மட்டும் ஆட்சிமொழி

(3) இலங்கையின் அரசகருமமொழி 1956ம் ஆண்டின் 33ம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு சிங்களமொழியாதல் வேண்டும்.

தமிழ் மொழியின் பிரயோகம் 1958ம் ஆண்டின் 28ம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள் சட்டத்திற்கிணங்க இருத்தல் வேண்டும்.

சிங்களமே சட்டவாக்கமொழி

10 (1) சட்டங்கள் யாவும் சிங்களத்தில் ஆக்கப்படலும், இயற்றப்படலும் வேண்டும்.

(2) அவ்விதம் ஆக்கப்படும் அல்லது இயற்றப்படும் ஒவ்வொரு சட்டத்தினதும் தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்றும் இருத்தல் வேண்டும்.

சிங்களச் சட்டமே மேலோங்கும்

(1) அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர் முன்னர் வலுவுடையனவாயிருந்த துணை நிலைச் சட்டவாக்கம் உட்பட்ட எழுத்திலான எல்லாச் சட்டங்களும் நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அதிகாரத்தின் கீழ் இயன்ற அளவு விரைவாக சிங்களத்திலும் தமிழ்மொழி பெயர்ப்பிலும் கசற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

(2) அவ்விதம் வெளியிடப்படும் சட்டம் அத்தகைய வெளியீட்டுத் தேதியை உடனடுத்து நிகழும் தேசிய சபைக்கூட்டத்தில் தேசிய சபையின் முன்வர் வைக்கப்படல் வேண்டும்.

(3) தேசிய சபை வேறு வகையில் ஏற்பாடு செய்தாலொழிய இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் சிங்களத்தில் வெளியிடப்படும் சட்டம், அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து, அச்சட்டமாகக் கொள்ளப்படல் வேண்டும் என்பதோடு ஆங்கிலத்திலுள்ள நேரொத்த சட்டத்தினை மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

நீதிமன்றங்களின் மொழி

11 (1) நீதியை நிருவகிப்பதற்குச் சட்டத்தினால் தாபிக்கப் பட்டுள்ள நீதிமன்றங்கள், நியாய சபைகள் என்பனவற்றினதும், கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாய சபைகள் ஏனைய நிறுவனங்கள் என்பனவற்றினதும் 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இணக்கச் சபைகளினதும் மொழி இலங்கை எங்கணும் சிங்களமாதல் வேண்டும்: அதற்கிணங்க வழக்குரைகள், நடவடிக்கைகள், தீர்ப்புக்கள், கட்டளைகள் என்பனவும் நீதிமுறைச்செயல்கள், சட்டநிருவாகச் செயல்கள் பற்றிய பதிவேடுகளுமுட்படவுள்ள அவற்றின் பதிவேடுகள் சிங்களத்திலிருத்தல் வேண்டும்;

எனினும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முதனிலை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நிறுவனங்களின் விடயத்திலும், கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாய சபைகள், வேறு நிறுவனங்கள் என்பவற்றின் விடயத்திலும், 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைச் சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட இணக்கச் சபைகள் விடயத்திலும், தேசிய சபை அதனது சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் வேறு வகையில் ஏற்பாடு செய்யலாம்."

—

## தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லமைப்பை கொண்டுவந்தவர்கள் தமிழ் மக்களை தனியே பிரிந்து செல்லும்படி தூண்டுகிறார்கள்.

—இவ்வாறு புதிய அரசியலமைப்பு திட்டம் பற்றிக் கேட்டபோது தமிழரசுத் தந்தை செல்வா அவர்கள் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(2)

## 'தலைப்பு' பிறந்த காரணம்!

# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

**கோவை-மகேசன்**

அண்மைக்கால தமிழ் நாட்டின் வரலாற்றில், தமிழர்கள் பெருமையடையத் தக்க—தமிழினம் இவ்வுலகில் வாழும்வரை மறக்கமுடியாத—தமிழனின் உணர்ச்சித் துடிப்பை பிரதிபலித்திட்ட—ஒரே நிகழ்ச்சி, தமிழ் நாட்டுக்கு 'தமிழ் நாடு' என்று அண்ணா பெயர் சூட்டிய இந்த நிகழ்ச்சிதான் என்றே நான் கருதுகிறேன்-

அமெரிக்கா சென்று தமக்கு ஏற்பட்ட பயங்கர நோய்க்கு அறுவை சிகிச்சை செய்து விட்டு தமிழ் நாடு திரும்பிய பேரறிஞர் அண்ணா அவர்கள், டாக்டர்களின் கட்டளையையும் மீறி 'தமிழ் நாடு' பெயர் சூட்டப்பட்டதையொட்டி நடைபெற்ற மகிழ்ச்சி விழாவில் கலந்து கொண்டார். இந்த விழாவில் அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் இன்றும் நம் இதயங்களில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றன.

''தமிழ் நாட்டுக்கு தமிழ் நாடு என்றுபெயர் சூட்டப்பட்டதை கொண்டாடி மகிழும் இந்த விழாவில் கலந்து கொள்ளாது இந்த உடலையும் உயிரையும் வைத்திருந்து என்ன பயன்?'' என்று அண்ணன் அன்று பேசிய வார்த்தைகள் நம்நெஞ்சங்களில் இழையோடி சிந்தையில் நிறைந்து, உணர்ச்சியூட்டிய படி இன்றும் இருக்கின்றன.

ஆகவே, அண்ணாவுக்கு முன் தமிழ்நாட்டுக்கு 'தமிழ் நாடு' எனும்பெயர்சட்டபூர்வமாகயாராலும்சூட்டப்படவில்லை—தன் தாய்த்திருநாட்டின் பழம் பெரும் பெயரை மீண்டும் சூட்டும் பெறற்கரிய வாய்ப்பு பேரறிஞர் அண்ணாவுக்கே கிடைத்தது. இந்திய உப கண்டத்தின் வரை படத்தில் —ஏன் உலக வரைபடத்தில் 'தமிழ் நாடு' என்னும் பெயரைப் பொறித்தவர் அண்ணா அவர்களே—எனவேதான் இக்கட்டுரைத் தொடருக்கு ''அண்ணாவின் தமிழ் நாடு கண்டேன்'' தலைப்பைத் தந்திருக்கிறேன்—

அது மட்டுமல்ல—அண்ணாவுக்கு முற்பட்ட தமிழ் நாடு மொழி, இனமரபு மறந்த தமிழ் நாடாக—எழுச்சியும் விழிப்புமற்ற தமிழ் நாடாக—மதவெறியும் மூடக்கொள்கைகளும் மலிந்த நாடாக—இருந்தது. அண்ணாவின் தமிழ் நாடோ இன எழுச்சி மிக்க நாடாக—இனபத் தமிழ்மொழிக்கு அரியணை தந்திட்ட நாடாக—மூடக் கொள்கைகளிலிருந்து விடுபட்ட திருநாடாக—தமிழர்களின் பண்டைப் பெருமைகளையும் தமிழ்மொழியின் சீர்த்தியையும் பாரெங்கும் பரப்பும் திருநாடாக——இன்று விளங்குவதைப் பார்த்து களிப்பில் மூழ்கிக் கிடக்கின்றோம்.

தமிழ் நாட்டில் 1967ல் அண்ணா அமைத்த தமிழ் ஆட்சியை அசைத்து விடலாம்—மீண்டும் தமிழ் நாட்டை இந்தி ஆதிக்கத்துக்கு அடிமைப்படுத்தி விடலாம்—என்கின்ற துரோக சிந்தையுடன் தமிழ்ப்பகைவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு திராவிட முன்னேற்றக் கழகத்துடன் பலப்பரிட்சை நடத்திக்கொண்டிருந்த காலகட்டத்தில்—அதாவது 1971ம் ஆண்டு பெப்ரவரி துவக்கத்தில்—தமிழ் நாடு செல்லவேண்டும் என்ற எண்ணம் இங்கு மூவரது உள்ளத்தில் எழுந்தது.

''அண்ணாவின் தமிழ் நாடு கண்டேன்' என்று உங்கள் கட்டுரைக்கு ஏன் தலைப்புக் கொடுத்திருக்கிறீர்கள்; தமிழ் நாடு நீண்ட நெடுங்காலமாக இருந்து வருவது தானே; அண்ணா பிறப்பதற்கு பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் நாடு இருந்து வருகிறது; அண்ணாவின் மறைவுக்கு பின்னரும் இன்னும் பல்லாயிர ஆண்டுகளுக்கு தமிழ் நாடு வாழ்ந்துகொண்டிருக்கப்போகிறது. இப்படிப்பட்ட நிலையில் தமிழ் நாட்டை 'அண்ணாவின் தமிழ் நாடு' என்று நீங்கள் சிறப்பாக குறிப்பிடுவதற்கு காரணமென்ன? வெறுமனே 'தமிழ்நாடு கண்டேன்' என்று குறிப்பிட்டிருக்கலாம் அல்லவா?''

மேற்கண்ட கருத்துப்பட ஓர் அன்பர் எனக்கு எழுதியிருக்கிறார். இதே போன்ற கேள்வி வேறும் சிலரது நெஞ்சங்களில் எழுந்திருக்கலாம.

பேரறிஞர் அண்ணா பிறப்பதற்கு பல்லாயிர பல்லாயிர ஆண்டுகட்கு முன்பிருந்தே சீரும் சிறப்பும், வளமும் புகழும், பீடும் பெருமையும் பெற்று உலகில் உயர் தனிச் சிறப்புடன் 'தமிழ் நாடு' திகழ்ந்திருக்கிறது என்பதிலும் அண்ணாவின் பிரிவுக்கு பின்னரும் தமிழ் நாடு தலை நிமிர்ந்து வாழ்ந்து வருகிறது; எதிர் காலத்தில் வாழப் போகிறது என்பதிலும் துளியும் ஐயமில்லை —

என்றாலும் கூட — அண்ணாவின் காலத்தில், அண்ணாவின் எண்ணத்தில் — உருவாகிய தமிழ் நாட்டுக்கும் அண்ணாவுக்கு முந்திய காலத் தமிழ் நாட்டுக்கும் மிகப் பெரிய வேறுபாடுகளையும் சிந்தனை மாற்றங்களையும் காணமுடிகிறது.

அண்ணாவின் சகாப்தம் தோன்றுவதற்கு பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டை சோழ, சேர, பாண்டிய மன்னர்கள் ஆண்ட காலத்தில் தமிழ் மொழியும், தமிழினமும் தலைநிமிர்ந்து வாழ்ந்துவந்திருக்கின்றன. தமிழ் மக்களின் பெருமையை தரணியெங்கும் அன்று உணர்ந்திருந்தது — தமிழ் மொழியை வளர்ப்பதில் தமிழ் மன்னர்கள் போட்டியிட்டுக் கொண்டு அதிக அக்கறை காட்டியிருக்கின்றனர். தமிழர்களின் வீர தீர பராக்கிரமச் செயல்களை மாற்றினத்தார் நன்கு அறிந்து வைத்திருந்தனர். தமிழ் மன்னர்களுக்கு சிங்களம், வங்கம் சீனம் போன்றவேற்று நாட்டுமன்னர்கள் திறைசெலுத்தி ஆண்டதாக வரலாறு பேசுகிறது.

எல்லாமிருந்தும் என்ன?

நாம் அனைவரும் மொழியால் — இனவழியால் — தமிழினத்தவர் என்கின்ற தமிழ்த்தேசிய ஒருமைப்பாட்டுணர்வு தமிழனிடம் அன்று இருக்கவில்லை — இந்த உணர்ச்சி இருந்திருந்தால் சேரனும், சோழனும், பாண்டியனும் அன்று தமக்குள் மோதி — போரிட்டிருக்க மாட்டார்கள்.

சோழப் பேரரசு, பாண்டியப் பேரரசு, சேரப் பேரரசு என்று தங்கள் அரசுகளுக்கு-தங்கள் நாட்டுக்கு—அன்று பெயர் சூட்டிக் கொண்டார்களே தவிர—'தமிழப் பேரரசு' என்றோ 'தமிழ்நாடு' என்றோ, மொழி, இன அடிப்படையில் தமது நாட்டுக்கு அன்றைய தமிழர்கள் பெயர் சூட்டத் தவறிவிட்டார்கள்.

1947.ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ல் இந்திய உபகண்டம் சுதந்திரம் பெற்ற பின்னர், மொழி வழி மாநிலங்கள் அங்கு முகிழ்ந்தன. 'ஆந்திர பிரதேஷ்' என்றும், 'கருநாடகம்' என்றும் 'கேரளா' என்றும் தென்னகமாநிலத்து மக்கள் தங்கள் தங்கள் மொழிகளின் அடிப்படையில் தங்கள் தங்கள் மாநிலங்களுக்குப் பெயர் சூட்டிப் பெருமை கொண்டார்கள்!

ஆனல் 'தமிழ்நாடு' மட்டும் சென்னை மாநிலமாகவே தொடர்ந்து இருந்து வந்தது!

அண்ணாவின் கையில் ஆட்சி பீடத்தைத் தமிழக மக்கள் ஒப்படைப்பதற்கு முன்னர்—தமிழுணர்ச்சியோ, தமிழ்ப் பற்றோ கிஞ்சிற்றும் அற்றவர்கள் ஆதிக்கம் புரியத் துடிக்கும் இந்தி மொழிக்கு மடி விரிப்பவர்கள்—தமிழகத்தை ஆண்டனர். சென்னை மாநிலம் என்ற பெயரை எடுத்து விட்டு, தமிழ் நாட்டுக்கு 'தமிழ் நாடு' என்று பெயர் சூட்டுமாறு தமிழக மக்கள் விடுத்த கோரிக்கையை ஆணவத்துடன் அவர்கள் நிராகரித்தனர். தமிழ் நாட்டுக்குத் தமிழ் நாடு என்று பெயருண்டோ? தமிழ் இலக்கியத்தில் இதற்கு ஆதாரமுண்டோ என்றுவேறு சவால் விடுத்தனர்.

தமிழகத்துச் சான்றோர், புலவர் பெருமக்கள், அறிஞர்கள், மொழிப்பற்றுளோர், தமிழ் இலக்கியங்களிலே 'தமிழ் நாடு' எனும் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதைத் தக்க சான்றுகளுடன் எடுத்துக்காட்டினர். அதன் பின்னும் தமிழ்ப் பகைவர்களின் ஆட்சி 'தமிழ் நாடு' எனும் பெயரைச் சூட்ட மறுத்தது.

இதன் பயனாக—தமிழ்நாட்டுக்குத் தமிழ் நாடு என்று பெயர் சூட்டுமாறு கோரித் தியாகி சங்கரலிங்கனார் உண்ணாநோன்புமேற்கொண்டார். முடிவு, தியாகி சங்கரலிங்கனாரின் உயிர் 'தமிழ் நாட்டை'க் காணாமலேயே பிரிந்தது! தருக்கர்களின் மனமோ குதர்க்கம் பேசியது!

தமிழ் நாட்டுக்காகச் சங்கரலிங்கனாரின் உயிர் பிரிந்த போது—'பட்டினிகிடந்தான்—செத்தான்' என்று எக்காளம் கொட்டினர் அதிகார பீடத்திலிருந்தோர்!

இத்தகைய வன்மம் படைத்த தமிழ்ப் பகைவர்களின் ஆட்சியைத் தமிழ் நாட்டிலே மாற்றியமைத்து — 1967-ம் ஆண்டு தமிழ் ஆட்சியைக் கொண்டுவந்தார் பேரறிஞர் அண்ணா!

அண்ணாவின் ஆட்சி மலர்ந்ததும்—தமிழ்த் தாய் புதுப் பொலிவு பெற்றாள்! தமிழகம் புதிய எழுச்சி பெற்றது. தமிழ் கூறும் நல்லுலகு களிப்புக் கடலில் ஆழ்ந்தது!

அண்ணாவின் ஆட்சி தமிழ் நாட்டில் நடைபெற்ற இரண்டு ஆண்டுகளில்—தமிழர் வரலாற்றில் மறக்க முடியாத நிகழ்ச்சி—தமிழன் ஒவ்வொருவனையும் பூரிக்க வைத்த நிகழ்ச்சி—தமிழ்நாட்டுக்குத் தமிழ் நாடு என்ற 'தலைப்பு' எழுதப்பட்டது தான்!

ஆம், உலகெங்கும் வாழும் ஆறு கோடித் தமிழர்களின் இதயமெல்லாம் புல்லரிக்க—தமிழறிஞர்கள், புலவர்கள், சான்றோர்கள் மகிழ்ச்சியில் திளைக்க—தியாகி சங்கரலிங்கனாரின் ஆவி ஆசீர்வதிக்க—தமிழ்த்தாய் ஆனந்தக் கூத்தாட—''சென்னை இராச்சியம்'' என்ற பெயரை நீக்கி, தமிழ் நாட்டுக்கு '',தமிழ் நாடு'' என்று சட்டரீதியாக பெயர் சூட்டி வைத்தார் பேரறிஞர் அண்ணா.

அவளகம்

## கலைஞர் கருணாநிதி கவிஞராகியது எப்படி?

### கவிஞர் கண்ணதாசன் சொல்கிறார்!



கவிதை என்பது என்ன என்பதிலே முழுக்க இலக்கண வரம்பு கற்ற புலவர்களுக்கும் எனக்கும் தகராறும் உண்டு வித்தியாசமும் உண்டு. முழுக்கப் புரியாமல் இருப்பது தான் கவிதை என்பது சிலரது வாதம். எடுத்த உடனேயே ஒன்றும மூன்றும் ஆறு என்று சொல்லிப் புரிய வைக்க வேண்டும் என்பது சிலரது வாதம். ஆனல் கவிதை என்பது புரிந்தும் புரியாமலும் இது அப்படியிருக்குமோ அல்லது இப்படியிருக்குமோ என்று ஆவலைத் தூண்டும் வகையிலும் இதற்கு இந்தப் பொருள் இருக்குமோ அல்லது அந்தப் பொருள் இருக்குமோ என்று எண்ணங்களை இருபடக் கூறும் நிலையிலும் இருப்பது தான் கவிதையாகும்.

படிக்கின்றவனுடைய மனதில் இது இன்னபொருளைத் தருமோ இதற்கு இன்ன பொருளும இருக்குமோ என்ற எண்ணங்களை உண்டாக்கவேதேநல்ல கவிதைக்கு இலக்கணமாகும்.

கவிதை என்றால் தேமா புளிமா, காய்ச்சீர், விளாச்சீர் என்று இந்தச் சீர்களையே பார்த்து ஏராளமான இலக்கியங்கள் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு உள்ளேயே கிடக்கின்றன. அது வெளியிலே போகாமலேயே இருக்கின்றன. மக்கள் மன்றத்திற்கு—அரங்கத்திற்கு வராமலேயே போனதற்குக் காரணம் இலக்கணத்தினுடைய வரம்புகளுக்குள்ளேயே அடங்கி ஆடமுயன்று அந்த வேலியிலே மோதிரத்தம் வந்து உண்மையான உடம்பிற்கும், ரத்தம் வந்த இடத்திற்கும் பேதம் தெரியாமல் போய் அந்த வேலிகளுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்பதினாலே முடங்கிப்போன நூல்கள் ஏராளமாகும்.

அந்த சில புத்தகங்களை நான் இப்போதுதான் பார்க்கிறேன் இப்போது தான் பார்க்கிறேன் என்றால் நூல்களைத் தேடிப் பிடித்துப் படிக்கும் பழக்கம் உண்டு என்பதாலே சில பழைய நூல்களை இப்பொழுதுதான் பார்க்க முடிகிறது.

எவ்வளவு அச்சிட்டார்கள்! எந்த ஆண்டு என்று ஒரு புத்தகத்தைப் பற்றிக்கேட்ட போது — 1931-ம் ஆண்டு அச்சிடப்பட்ட ஒரு புத்தகம் ஆயிரம் பிரதிகள் அச்சாகி இன்னும் 860 புத்தகங்கள் பாக்கியிருக்கின்றன. வருடம் 40 ஓடி விட்டது. விற்றது 140 புத்தகங்கள் தான்! ஏன்?

அந்தப் புத்தகங்களிலே இலக்கணம் ஒழுங்காக இருக்கிறது. இலக்கணத்திற்குக் கட்டுப்பட்ட இலக்கியம் நன்றாக இல்லை.

என்னதான் ஆடை உடுத்தி திருத்தியிருந்தாலும் கூட இயற்கையான முக அழகு அலங்காரம்-வசீகரம் இல்லையென்றால் காஞ்சிபுரம் கண்டாங்கிதான் என்னசெய்யும், சின்னாளப்பட்டி ரவிக்கை தான் என்ன செய்யும்?

அழகு என்பது இயற்கையாக உடம்பிலேவந்து அமைகின்ற அழகாக அமைவது போல இந்த அழகும் இலக்கணமும் வெறும் இலக்கணமாக அமைவதில் பயனில்லை;

இலக்கண சுத்தமாக 'மூணும் இரண்டும் அஞ்சு முழுபருத்திப் பஞ்சு; காஞ்ச இஞ்சி சுக்கு; கடல் தண்ணி உப்பு, மலை கல்லு; மண் வெட்டி இரும்பு; கோணக் காய்சொன்னக்காய், வெண்டக்காய், சுண்டக்காய் என்று எழுதினல் அது முழுக்க இலக்கணத்திற்கு உடபட்டு இது ஆசிரியப்பா மாதிரி இருக்கிறது என்று இலக்கண விமர்சனம் செய்யலாமே தவிர அதிலே அடுத்தாற்போல் பார்ப்பதற்கு பொருள் ஒன்றும் இருக்காது.

ஆனல் பண்டைப் புலவர்களிடையேயும் சமகாலமாக பாடியவர்கள் பல

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில, சிங்கள மோகம் அணுவளவும் வேண்டாம்! அன்னைத் தமிழிலே அனைத்து அலுவலும் செய்வோம்!!

புதிய குடியரசு அமைப்பில் தமிழ் மொழிக்குக் கிஞ்சிற்றும் இடமில்லாத நிலையில் தமிழ் மொழியைப் பற்றிய பேச்சு மூச்சின்றியே தயாரிக்கப்பட்டு விட்டது புதிய அரசியல் திட்டம்; இந்நிலையில் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தமது தாய்மொழிக்குக் கொடுத்திருக்கும் அந்தஸ்து என்ன என்பதைப் பார்ப்பது அவசியம்;

'இலங்கையில் தமிழர்கள் என்று கூறப்படுபவர்கள் எல்லாம் தமிழ்மொழிக்கு இரண்டாவது இடத்தைத்தான் கொடுத்திருக்கிறார்கள்; அவர்கள் முதலிடம் கொடுத்து வளர்த்து வருவது ஆங்கில மொழியை மட்டுமே என்பது மறுக்க முடியாத ஆனால் கசப்பான உண்மை.

கடந்த சில வாரங்கட்கு முன் சுதந்திரனில் நண்பர் ஒருவர் இலங்கைவங்கி தனிச் சிங்களத்தில் தமிழர்களுடன் தொடர்புகொள்கிறதுஎன்று குறைபட்டிருந்தார். ஆனால் இலங்கை வங்கி எந்தமொழியில் வங்கியுடன் தொடர்பு கொள்ளப் போகிறீர்கள் என்று கேட்டு எழுதிய சுற்று நிருபத்துக்குத் தமிழில் மட்டுந்தான் என்று பதிலளித்தவர்கள் எத்தனைபேர் என்பதை அவர் கூறவில்லை. பெரும்பாலான தமிழர்கள் தாம் ஆங்கிலமொழியில் மட்டுமே தொடர்பு கொள்ள விரும்புவதாக வெட்கம் ரோசமின்றிக்கூறியிருக்கிறார்கள்.

இந்த இழிநிலை கண்டுதான் யாழ். மாநகரசபை தமிழ் மன்றம் தமிழில் தொடர்பு கொள்ள விரும்புவதாக எழுதும்படி தமிழ் மக்களுக்கு வேண்டுகோளும் விட்டிருந்தது. ஆனால் அதே வேண்டு

## தமிழை வாழவைக்கும் சக்தி தமிழனிடமே இன்று உண்டு!

கோள் செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது.

இலங்கைவாழ் தமிழ்பேசும் பெருங்குடி மக்கள் ஆங்கில மொழிக்குக் கொடுக்கும் தனி கலாம்? இந்தக் கொடிய ஆங்கில மோகத்திலிருந்து ஈழத்தமிழினம் விடுபடாத வரையில் தமிழ்மொழியின் சிரழிவைப் பற்றியோ, தமிழின சுதந்திரம் பற்றியோ அரசாங்க சேவையில் சேர்ந்த தமிழர்கள் எல்லாரும் தமிழ் மொழியில் மட்டுமே கடமையாற்றக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இதே நிலையில் வட கிழக்கு மாகா

## தமிழை தமிழரே புறக்கணித்தால் தமிழை வாழவைப்பார் யார்?

மதிப்பைத் தமிழுக்குக் கொடுப்பதற்குத் தயங்குகிறார்கள். ஆண்டாண்டு காலமாக ஆங்கிலேயனுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தபடியால் இந்நிலை ஏற்பட்டிருக்கிறது பேசுவதில் எந்தவிதமான அர்த்தமும் இருப்பதாகக் கூறமுடியாது:

இங்குள்ள தமிழர்கள் அனைவரும் தாம் தமிழ்மொழியில் மட்டுமே தொடர்புகொள்ள முடியும் என்று வங்கிக்குக் ணங்களில் உள்ள கச்சேரிகட்கு வரும் கடிதங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் மட்டுமே இருப்பதால் இந்தச் சேவையாளர்கள் ஆங்கிலம் படிக்கவேண்டி நிர்ப்பந்தப் படுத்தப்படு

# யாழ்ப்பாணத்தில்

தமிழர் இன்று தமிழராக வாழவில்லை. தமிழருடைய உணவு, உடை, பழக்க வழக்கம் ஆகிய எதிலுமே தமிழ் மணக்கவில்லை.

'தமிழர்' என்ற பெயர் கொண்டு வாழ்கின்றனரே யன்றி, தமிழர் உள்ளத்திலே, தமிழன் என்ற உணர்ச்சியில்லை. தமிழ் இனத்தை, தமிழ் நாட்டை, தமிழ் மொழியை, தமிழனல்லாத, ஒருவன் குறைவாகப் பேசினால், அதைக் கேட்கும் தமிழனின் நெஞ்சு கொதிப்பதில்லை.

தமிழ்த்துரோகி அரசியல் வாதி ஐவரும் தமிழ்மக்களைக் காட்டிக் கொடுத்து, படுகுழிதோண்டுகின்றனர். இந்த நம்பிக்கைத் துரோகிகளின் சொல்லைக் கேட்டு தமிழ் மக்கள் படுகுழியில் விழுந்து விடக்கூடாது. தமிழை அவமதித்த மொட்டையர்களுக்கு தகுந்த பாடம் புகட்டவேண்டும்.

தமிழனல்லாதவன் தமிழைப்பற்றி குறைவாகப் பேசினால், கேட்கும் தமிழனின் நெஞ்சகொதிப்பதில்லை தன்னைக்குறைவாகப் பேசினால், ஆத்திரப்படுகின்றான். தமிழ் இனத்தைக் குறைவாகப் பேசினால், அதைக்கேட்டு அமைதியோடுவாழ்கின்றான் ஆம், இனமானத்தை விடத் சுயநலமே பெரிதென்றெண்ணும் நிலைக்குத் தமிழர் தாழ்ந்து விட்டனர்;

யாழ்ப்பாண நகரைச் சுற்றிப் பார்த்தால் தமிழ்மணக்கின்றதா? இல்லை, இல்லை. எங்கெங்கும் ஆங்கில ஆதிக்கம், சிங்கள ஆதிக்கம், தமிழர் அல்லாதாரின் ஆதிக்கம்! சிற்றுண்டிச் சாலைகள் எல்லாம், 'மாடர்ன்கபே' 'ஆரியபவன்' பரணிஹோட்டல், சைவஹோட்டல், அம்பாள் கபே, மலாயாகபே, வேறும் பல, பல பெயர்கள் எல்லாம் பிறமொழியிலேயே! தமிழ் மொழிப் பெயர்கள் சில இடத்திலேயே! எல்லா இடத்தையும் சுற்றிப் பார்த்தால், தமிழுக்கெதிரான பண்பிலேயே பெயரிடப்பட்டுள்ளன.

தமிழரல்லாதாரால் நடத்தப்படுவதால் அவற்றிற்குத் தமிழ்ப் பெயர் சூட்டப்படவில்லை என்று சொல்லி விடுவதற்கில்லை, தூய தமிழர்களாலேயே நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலைகளுக்குக் கூட 'சிட்டிகபே' 'கபே காசினோ' 'அம்பாள் கபே' 'விஞயகா விலாஸ்' 'ரத்தின விலாஸ்' என்றே பெயரிட்டுள்ளன;

பூங்காவில் புகுந்தால், அங்கும் 'ராபின்ஸன் பார்க்' 'பிப்பிள்ஸ் பார்க்' 'தேப்பியர் பார்க்' என ஆங்கில நாற்றமடிக்கிறதேயன்றித், தமிழ் மணம் வீச வில்லை. வண்டு யாழ் செய்வதுமில்லை பூவில் மணம், மணத்தில் தேன், இவற்றையெடுக்க

# தமிழரும் உளரோ?

வண்டு யாழ் செய்கின்றது. இப்பொழுது நிலைமை மாறி விட்டது.

பெண்களைப் பார்த்தால் ஆங்கில நாகரீகம்தான், சிங்கள நாகரீகம் தான், முன்பு 12 வயது கடந்ததும் அடிப்பாதம் வரை பாவாடை, சேலை அணிவார்கள். இன்று மினிஸ்கேட் போன்ற வெட்டுச் சட்டை அணிகின்றனர்: சிங்கள பெண்கள் கட்டுவது போல சேலை அணிவது அதுவும் காவடி மூடர்களது பிள்ளைகளும் அப்படித்தான்.

'தமிழ்ப் பெண்கள் வீரம் வாழையடி வாழையாக வளர்ந்து வரும். அன்ன மூட்டிய மணிக்கையால், தம் மக்களுக்கு ஆணைகாட்டி, அமர்க்களம் அனுப்பிய பெருமை, தமிழ் இனப் பெண்களுக்கே தனியுரிமை.

இன்று கட்டிய கணவனை அடிப்பதுவும், ஆண்களைக் கேவலமாக மதிப்பதுவும், அன்னியனைக் கண்டு அவன் மீது சாகச வலை வீசுவதும் தான் சிலரது வேலை. இதுதான் பெண்ணின் பெருமையா? வீரக்கண்ணகி வழிவந்த தமிழ் பெண்கள் வீரமற்று வாழ்வதா? கூடாது நமது நாட்டுக்கு நமது தமிழ் மொழிக்கு பெண்களே சேவை செய்ய வேண்டும்.

பேருந்துச் சாலைக்குச் சென்றால் எந்த நேரமும் ஆங்கிலம், சிங்களம் பேசுகின்றனர். வேட்டி அணிந்து நிற்கும் "தமிழ் பேசுபவனை மதிப்பதில்லை. ஏன் தமிழ் பேசாமல் ஆங்கிலம், சிங்களம் பேசவேண்டும். ஆங்கிலம், சிங்களம் படிக்கலாம்; ஆனால் அதைப் பேசித் திரியக் கூடாது அதில் உள்ள அறிவு நூல்களை தமிழ் நூலாக வெளியிட வேண்டும். அதை விட்டு [illegible]

தான் தெரியும் என்று பொச்சடிக்கின்றனர் தமிழர்கள்.

ஒரு சில சொல் தெரிந்தவனும் அதையேதான் பாவிக்கின்றான். இதனால் அல்லவோ நமது தமிழ் மொழிச் சொற்கள் மறைகின்றன. உதாரணமாக அங்காடி, வாகடம், போன்ற பல லட்சம் சொல் மறைந்தது. ஆங்கிலேயன் ஆட்சியில் நடக்காதமோசடி இன்று தமிழ் மக்கள் செய்கின்றனர். இவர்கள் சூரியன் கிழக்கில் அல்லாமல் மேற்கில் உதித்திட்டான் என்ற எண்ணத்தினால் போலும் தமிழுக்கு இழுக்கு விளைவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் 'வீதியில் நுழைந்தால் கே. கே. எஸ். ரோட், ஏ. எல். எஸ். ரோட் என்று ஆங்கில நாற்றமடிக்கின்றதேயன்றி நமது பண்பார்ந்த தமிழ் மொழியில் இல்லை.

கடற்கரைக்கு கூட 'யல்ஞபீச்' என்றே பெயர். அங்கிருக்கும் சிற்றுண்டிச் சாலைக்கு 'யல்ஞ கன்டீன்' என்றும் நீந்தும் இடத்திற்கு 'ஸ்விம்மிங்பூல்' என்றுமே பெயரிடப்பட்டுள்ளன. அந்தோ, இயற்கை அழகொழுகும் கடற்கரையில் கூட நம் இன்பத் தமிழ் மணக்கவில்லையே.

கலைநகர்

க. செ. திரவியராசா

இங்களம், ஆங்கிலம் இப்படித்தான் பயன்படுத்த வேண்டுமா? வந்தவனுக்குப் பெருமை, இருந்தவனுக்கு இழிவு, என்ற நிலையிலா? வேலைக்காரியை வீட்டுக்காரியாக்கும் முறையிலா? இந்த அவல நிலை, அவமான நிலை, இன்றே அகலவேண்டும்.

தமிழர்களே உங்களுக்குத் தமிழ் பற்று உண்மையானால் கடையில் தொங்கவிடப்படும் பலகை தமிழிலேயே இருக்க வேண்டும்; பூங்காக்கள் நடை பாதைகள் ஆகியனவற்றிற்கெல்லாம் தமிழ் பெயர்களை தமிழருடைய பெயர்களை வைக்கும்படி யாழ் நகராண்மைக் கழகத்தைக் கட்டாயப்படுத்த வேண்டும் தமிழர்களே நீங்கள் யாழ்ப்பாணத்தில் இருப்பது உண்மையானால் கிளர்ந்தெழுங்கள். அப்பொழுது தான் நீங்கள் தமிழர், அப்பொழுதுதான் நீங்கள் கன்னித் தமிழ் தாயின் பிள்ளைகள்.

வாழ்க தமிழ் மொழி. வளர்க தமிழ் [illegible]

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

கூறினால் வங்கி என்ன செய்ய முடியும்? எல்லோரும் ஒருமித்து அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற எந்தமிழ்ப் பழமொழிக்கேற்ப நடந்து கொண்டால் வங்கி நிச்சயம் பணிந்தே தீரும்; இதனால் எத்தனையோ தமிழ் இளைஞர்கட்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

தமது சொந்தத் தாய் மொழியான தமிழ் மொழி இருக்கத்தக்கதாக, ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ள விரும்புவதாக எழுதிய தமிழர்கள் வெட்கப்பட வேண்டும். அவர்கள் தாம் முன்பு எழுதியதை வாபஸ் பெற்று தாம் தமிழ் மொழியிலேயே செய்யப் போவதாகக் கூற வேண்டும். தமிழ் வங்கித் தொடர்பாளர்கள் செய்வார்களா?

வங்கித் தொடர்பு மட்டுமல்லாமல் அரசாங்கத்துடன் தமிழர்கள் கொள்ளும் தொடர்பு அனைத்துமே ஆங்கில மொழியில் தான் நடைபெறுகின்றன. தமிழ்ப் பகுதிகளில் உள்ள கச்சேரிகட்குத் தமிழர்களிடமிருந்து வரும் கடிதங்களில் தமிழ் மொழியைப் பார்க்கவே முடியாது: 1956-ம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்மொழிமூலமாகவே படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் பின்னர் கிறார்கள். அரசகருமமொழியையும் படிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இவர்களின் துயரநிலையை, தம் மகனின், மகளின் மருமகனின் இக்கட்டான நிலையை எல்லாத் தமிழ்ப் பெற்றோரும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்மொழி மூலமாக அரசாங்கசேவையில்சேர்ந்த தம் உறவினர்கள், தமிழினம் அனுப்பும் ஆங்கிலக் கடி

## தமிழ்ப்பித்தன்

தங்களால் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை உணரவேண்டும்.

சிங்கள மன்னர் கைமுனு கூறியதற்கொப்ப ஒரு பக்கம் சிங்கள மொழி மூலமும், மறுபக்கம் ஆங்கிலமொழி மூலமும் நசுக்கப்படும் இத்தமிழர்களின் நிலையை இன்றைய தமிழினம் புரிந்து கொள்ளாதது ஏனோ? அல்லது தெரிந்தும் ஆங்கிலத்தில் செய்வதுதான் பெருமை என்று கருதுகிறார்களா?

அரசாங்கத்துடன் கொள்ளும் சகல தொடர்புகளையும் தமிழ்மொழி மூலம் செய்யும் படி பல அரசாங்க ஊழியர்

(10ம் பக்கம் பார்க்க)

# வங்கத்து வரலாறு.

க. தவராசா

வங்கம் என்பது வளம் மிக்க தனி நாடு
அங்கு உள்ளவர்கள் அடிமைகள் ஆயினர்
எங்கும் சுதந்திர உணர்வு பெருகிற்று
சிங்கமென முஜிபர் சீறி எழுந்தார்.

அடிமைகள் ஆள்வதை அரசு மறுத்தது;
குடிசனம் குறைந்த மேற்குப் பாகிஸ்தான்
குடிசனம் கூடிய கிழக்கு வங்கத்தை
அடக்கி ஆள நினைத்து வந்தது.

அடங்கி விடுமா அரிமா வங்கம்
அடக்கி விடுமா பாகிஸ்தான் நரிகள்
சுட்டு வீழ்த்தினர் சுதந்திர மக்களை
சுடச்சுட பெருகிற்று சுதந்திர உணர்வு;

தருமநெறியில் தவழ்ந்திடும் பாரதம்
அதர்மக் கொலைகள் நடப்பது கண்டது
அநீதியைக் களைந்தனர் தர்மப்படைகளால்
தர்மம் வென்றது பிறந்தது வங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கருத்து

அன்புள்ள, சுதந்திரன் ஆசிரியருக்கு,

சென்ற வார (26-12-71) சுதந்திரன் இதழில் இந்திய - பாகிஸ்தான் போரும் அதன் விளைவுகளும்'' என்ற தலைப்பில் நீங்கள் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தை எப்படி பாராட்டுவதென்றே எனக்கு தெரியவில்லை. ஏனெனில் அந்த ஆசிரியர் தலையங்கத்தை நான் திரும்ப, திரும்ப வரிக்கு வரி படித்து சுவைத்தேன்.

அந்த ஆசிரியர் தலையங்கத்தின் கடைசி இரண்டு பந்திகளில் நீங்கள் பூட்டோவுக்கு வழங்கிய அறிவுரைகளில் எவ்வளவோ உண்மைகள் பொதிந்திருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு புதுமையான கருத்தை இலங்கையில் வேறு எந்த தமிழ் பத்திரிகையும் வெளியிடவேயில்லை என்று நினைக்கிறேன்; இதன்மூலம் உங்களுக்கு இலங்கை அரசியல் மட்டுமல்ல உலக அரசியலும் நன்கு எழுத வரும் என்று எடுத்துக்காட்டி இருக்கிறீர்கள். சபாஷ், இதையொட்டி நானும் இந்த நாட்டில் வாழும் லட்சக்கணக்கான தமிழ் விடுதலை விரும்பிகளில் ஒருவன் என்ற முறையில் என்னுடைய கருத்தையும் இங்கே கூற இடமளிப்பீர்கள் என நம்புகிறேன்;

புதிய வங்கதேசம் உருவாகிவிட்டது. அதை யாரும் இனி தடுக்கமுடியாது. பூட்டோவின் அப்பன் வந்தாலும் இதை தடுக்க முடியாது. ஆகவே ஜனாப் பூட்டோ உண்மை நிலையை உணர்ந்து-வரட்டு வேதாந்தம் பேசாமல்- இந்தியாவுக்கு எதிராக ஒரு அரை பைத்தியக்காரனைப்போல் உளறுமல் - வங்கத்தின் சிங்கம் — வங்கத்தின் பிதா ஷேக் முஜிபர் ரகுமானை விடுதலைசெய்து ஒரு உடன்பாட்டுக்கு வருவதே நல்லது; இல்லையேல் யாகியாகானுக்கு நடந்ததே அவருக்கும் சீக்கிரத்தில் நடக்கும். மேற்கு பாகிஸ்தானும் பறிபோய்விடும்.

அரேபிய நாடுகளுக்காக அவர்களுடன் சேர்ந்து கொண்டு ஸ்ரீமாவோ அம்மையாரின் கூட்டு முன்னணி அரசு இஸ்ரேலை ஒரு ஆக்கிரமிப்பு நாடென்று கண்டித்து- அதனுடன் உள்ள ராஜரீக உறவுகளை எல்லாம் துண்டித்துக்கொள்ளும் துணிவு இருந்தால்-வியட்நாமில் அமெரிக்காவுக்கு எதிராக குரல்கொடுக்க துணிவு இருந்தால்— ஏன் புதிய வங்காள அரசை அங்கீகரிக்க மட்டும் தயக்கம் காட்ட வேண்டும்? ஏன் மௌனியாக இருக்கவேண்டும்?

உலக அரசியல் என்னும் நாடகத்தில் ஸ்ரீமாவோ அரசின் இரட்டை வேஷ நடிப்புக்கு சீக்கிரம் ஒரு முடிவு வரத்தான் போகிறது. உண்மையில் ஸ்ரீமாவோவின் கூட்டரசு சீனுவின் மாவோவின் அரசுக்கு பயந்தே வங்காள தேசத்தை அங்கீகரிக்க தயக்கம் காட்டுகிறது; இதுதான் உண்மைக் காரணம். இதன் பின்னணிக் காரணங்களும் எல்லாரும் அறிந்ததே.

அடுத்து சுதந்திரமென்றால் கடையில் வாங்கும் சுக்கு மிளகு என்று நினைத்திருக்கும் ஈழத்தில் வாழும் சில கால் நக்கி தமிழர்களுக்கும், ஆளும் கட்சி அடிவருடிகளுக்கும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். வங்க தேசத்தை சற்று திரும்பிப் பாருங்கள். அந்த மக்கள் சுதந்திரம்பெற செய்த தியாகங்களையும்-பட்ட கஷ்டங்களையும் திரும்பிப் பாருங்கள்: எண்ணிப்பாருங்கள்; அப்பவாவது உங்களுக்கு சுதந்திரத்தின் விலை என்னவென்று தெரியட்டும்: தெரியாவிட்டால் வாரா வாரம் 25 சதம் கொடுத்துசுதந்திரனையாவது வாங்கி கொஞ்சம் படித்துப் பாருங்கள்: அப்பொழுது புரியும்:

வாழ்க முஜிபர்! வெல்க வங்கம்!

வாழ்க செல்வா! வெல்க தமிழரசு!

—வி. ஆர். லிங்கம்.
இணுவில்;

★

ஆசிரியர் அவர்கட்கு,

எங்கள் இனத்தின் விடுதலை முழக்கமாம் தமிழரசுக்கட்சியின் கொள்கைகளைத் தாங்கி வரும் தமிழின விடிவெள்ளியாகிய சுதந்திரன் பத்திரிகை, நண்பர்களுக்கு நல் விருந்தாகிய அமிர்தமாயும், எதிரிகட்கு காதிலே நாராசம் வார்த்தது போன்றும் இருக்கின்றது.

தங்கள் செயல் தொடரட்டும், தமிழினத்தின் அடிமை விலங்கு ஒடியட்டும், எட்டப்பர்களும், காக்கை வன்னியர்களும் இருந்த இடம் இல்லாது தொலையட்டும்.

எங்கள் சுதந்திரனில்வரும் கட்டுரைகளும், கண்டனங்களும், சவால்களும் எட்டப்பர் கூட்டத்தை உண்மையிலேயே கதிகலங்க வைத்தது வைக்கின்றது. தொடர்ந்தும் அவர்களைச் சாடித் 'தமிழர் மத்தியில் இருந்து ஒழித்துக் கட்டவேண்டும்.

தமிழினம் தப்பிப் பிழைப்பதற்குரிய முதலாவது சிகிச்சை முறை இதுதான். உங்கள் பணியைத் தளர விடாதீர்கள்; தொடர்ந்து செய்யுங்கள். தமிழர்களாகிய எம் உயிர் இருக்கும்வரை எங்கள் ஆதரவு உங்களுக்கு இருக்கும்.

—ஞ. சோதிலிங்கன்.
கல்முனை;

★

## அறிவிற்கு விருந்து! அறியாமைக்கு மருந்து!!

அன்புள்ள ஆசிரியருக்கு,

கடந்தவாரம் 19-12-71ல் வெளியான சுதந்திரனில் அன்பர் ஒருவர் எழுதிய 'ஞானப்பால்' என்னும் சிறு கதையைப் பிரசுரித்திருந்தீர்கள். இக்கதையைப் படைத்தவரை மட்டுமின்றி, பத்திரிகையில் பதித்து ஆயிரமாயிரம் மக்களும் படிக்கவே சந்தர்ப்பம் கொடுத்த தங்களையே மிக மிகப் பாராட்டுகிறேன். ஏன்?

தங்கள் பத்திரிகைத் தொண்டு மூலம் இக்கதையைப் படித்திடும் ஒவ்வொருவரும் எம் சமுதாயத்தில் குடிகொண்டிருக்கும் அறியாமைகளை உணர வைத்திருக்கிறீர்கள். இப்படி எமது சமுதாயத்தின் அறிவிற்கு விருந்தாக அறியாமைக்கு மருந்தாக அமையும் இன்னும் பல சிறுகதைகளைய பிரசுரித்து எம் சமுதாயத்தின் அறியாமைகளை ஒழித்திடவே தாங்கள் செயலாற்றிடுவீர்களாக!

''வளர்க தங்கள் பத்திரிகைத்தொண்டு—ஒழிக எம் சமுதாயத்தின் அறியாமை.''

—தங்க[illegible]
கா[illegible]

அன்பின் அண்ணன் கோவைக்கு,

தமிழரசுக்கட்சி மிகவும் துரிதமாகச் செயற்பட்டு மக்களிடையே புதிய உணர்ச்சியை ஊட்டி வருகின்ற இந்த வேளையில் சுதந்திரன் ஆசிரியராகிய நீங்கள் உங்கள் அரசியல் மடல் மூலம் என்னைப் போன்ற பல்லாயிரக் கணக்கான இளைஞர்களையெல்லாம் தட்டி எழுப்பி, அதோ பார் வங்காளத்தை. அடிமைத்தளையினின்றும் நீங்கி விடுதலை பெற்றுவிட்டது: அதேபோல் எங்களுக்கும் காலம் தாழ்த்தியாவது உரிமை கிடைக்கும் தொடர்ந்து செயல்படு என்று கூறும் இவ்வேளையில், மட்டுநகர் பெற்ற எழில்தமிழ் ஆளரோ எங்கள் உணர்ச்சிகளையெல்லாம் மழுங்கடிக்கச் செய்யும் வண்ணம் தமிழினத்தின் சாபக்கேட்டை, எப்படியெப்படி எல்லாமோ புகழ்ந்து நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறார்.

ஏன் அண்ணன் இராசதுரை தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட இழைக்கப்பட்டு வரும் அநீதிகளையெல்லாம் மறந்து விட்டாரா? அல்லது மறைக்கிறாரா? வடக்கு மட்டும் அல்ல கிழக்கும் சேர்ந்து பெரிய மாணவ ஊர்வலத்தை—ஆர்ப்பாட்டத்தை நடத்தியதே. இதையெல்லாம் ஏன் அவர் மறந்தார்? மறக்காவிட்டால், பின் ஏன் அந்த மந்திரியை —அவர் வகுப்புவாதி அல்ல, நேர்மையானவர், நல்லவர் என்றெல்லாம் புகழ்ந்து பேசுவான்? தமிழரசுக் கட்சியால் தான் இராசதுரை மட்டுநகர் பிரதிநிதியானார் என்பதை மறந்துவிட்டாரா? கட்சிவேறு தான் வேறு என்று கருதுகிறாரா?

அண்ணா, சுதந்திரன் மூலம் நான் விடுக்கும் இந்த சிறிய வேண்டுகோளை அப்படியே சமர்ப்பியுங்கள் எழில் தமிழ் ஆளரிடம்,

''ஏதோ சில உதவிகளை நீங்கள் அவரிடம் இருந்து பெற்றால், அவரைத் தனிப்பட்ட முறையில் சென்று புகழுங்கள்—பாராட்டுங்கள்; ஆனல் நாடாளுமன்றத்தில் மட்டும் அவருடைய 'நேர்மையை'ப் பற்றிப் புகழ்ந்து பாராட்டாதீர்கள். தமிழன் கண்ணீர் வடிக்கிறான்—அவன் கண்ணீரைத்துடைத்து அவனுக்காக உரிமைக்குரல் எழுப்ப வேண்டிய நீங்கள் தமினத் துரோகியை வாழ்த்த வேண்டாம். தமிழனைப் புதை குழிக்கு அனுப்பும் எட்டப்பன் என்ற பேரை நீங்கள் பெறவும் வேண்டாம்.

ப. சோமசுந்தரம்,
குப்பிளான்.

## வங்கியை நோக்கி குவியும் கடிதங்கள்

தமிழில் மட்டுமே தங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்றும், இன்றேல் வங்கிக் கணக்கை மூடிவிட நேருமென்றும் எச்சரித்து இலங்கை வங்கிகளில் கணக்கு வைத்துள்ள தமிழ் வாடிக்கையாளர்கள் பலர் வங்கி நிர்வாகத்துக்கு எழுதி வருகின்றனர். சிலர் அதன் பிரதிகளை நமக்கு அனுப்பியிருக்கின்றனர்.

ஏனையோரும் இதனைத் தொடரட்டும். எல்லோரும் ஒற்றுமையாக தமிழில் தொடர்புகொள்ளவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தால் வங்கி நிர்வாகம் பணிந்துதான் ஆகவேண்டும். தமிழில் தொடர்பு கொள்பவர்களுடன் வங்கி தமிழிலேயே தொடர்பு கொள்ளுமென்று நிதியமைச்சர் நடாளுமன் [illegible]

## விரைவில் முடிவெடுப்பீர்!

தாடிப் பெரும்புலவா! தாகூர்க்கவியரசே!
ஓடிவரமாட்டாயா? உனதருமை நாட்டிற்கே!
வாடிக்கிடந்திட்ட வங்கத்தார் இப்போது
பாடிமகிழ்கின்ருர்! பார்ப்பதற்கு வாராயோ?

தாயென்று வங்கத்தின் தனிமொழியைக் காத்திட்ட
நீயின்றிருந்தாயேல் நீண்ட கவிதருவாய்!
வாயொன்றிருந்தாலும் வாழ்த்தமுடியாத பனி
நோயொன்றிருப்பதனுல் நோகின்ருர், வாராயோ

உந்தன் கவிதைகளால் உணர்ச்சிமிகப்பெற்று
வந்தவர்களன்ருே நின் வங்கத்தார்? அன்னர்க்குச்
சொந்தமொழிப்பற்ரு தொலையும்?
தொலைந்திருந்தால்,
இந்த நிலை வருமோ? இல்லை, அழிந்திருப்பார்!

அடக்குமுறை கொண்ட ஆட்சி நெடுநாட்கள்
நடக்காது! எப்போதும் நசிவோர் நசிபட்டே
கிடக்கார்! இது வங்கம் இழக்குத்தரும் பாடம்!
படக்காட்சியல்ல இது, பாரின் பெருநிகழ்ச்சி!

அல்லற்பட்டாற்ருது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் சிறந்த படையென்றே
நல்ல தமிழ் வள்ளுவனின் நாவாலுரைத்த குறள்
வெல்லாமற் போயிருப்பின் வீசி யெறிந்திருப்பார்!

மக்களே மாமன்னர்! மக்களால் தேர்ந்தெடுப்போர்
மக்களின் நற்ருெண்டர்! மறந்து — மதிகெட்டு
மக்கள் தொடர்பறுத்து மனம்போல
வாழ்ந்தாரேல்
தக்கதொரு பாடம் தவருமலே பெறுவார்!

மொழிதான் மதத்தைவிட முக்கியமாம்! ஓரினத்தின்
விழியோ, உயிரோ, விளம்பும் மொழிதானும்!
அழியின் மொழி, இனமும் அழியுமாம்! ஆதலினுல்
அழியாமற் காத்தனராம், அவர்மொழியை
வங்கத்தார்!

வாழத்தெரியாமல் வதைபட்டுக்கொண்டிருக்கும்
ஈழத்தமிழர் இதை இதயத்திற் கொள்வாரோ?
ஆளப்படுவோராய் — அடிமைகளாய் வாழ்வாரோ?
வேழத்தமிழர்களே, விரைவில் முடிவெடுப்பீர்!

'தாமரைத்தீவான்'

## வாழிய வங்கத் தாயே!

வழக்கறிஞர் மு. திருநாவுக்கரசு

தம்பி:—

அடிமையாகி, அடிபணிந்து, அடங்கியொடுங்கி வாழ்ந்தவர்,
விடிவு பெற்ற கதைகள் பல விடிய விடியச் சொல்லலாம்...
சரித்திரத்தைச் சான்று காட்டி சரிதம் பலவும்
சொன்னலும்
சிரித்து வெறுத்து இவையெலாம் சித்தரித்த பொய்
யென்பாய்—
நேற்று—வங்க நாட்டில் நடந்த வீர தீரச் செயல்களை
கண்டு கேட்ட பின்பு முனது கருத்து சற்றே மாருதோ?
வங்க நாட்டில் வாழ்ந்து வந்த வீரதீர மக்களை...
ஆளவந்த யஹிய-கானெனும் அசுரப் பேர்வழி
அடித்து நொருக்கி மக்கள் தம்மை அல்லலுறச் செய்தனன்;
வங்கதேசம் வங்காளி மக்கள் பிறப்புரிமை யென்றதும்
வாய்திறந்து பேசுவோரை வதைத்துக்கொன்ருன்
கொடியவன்
தேர்தல் வைப்பேன் தெரிந்துகொள்வேன் மக்கள் மனதை
என்றவன்
தேர்தல் ஒன்றை வங்க நாட்டில் திறம்படவே நடத்தினன்
ஒன்று சேர்ந்த வங்க மக்கள் ஓரணியாய் திரண்டுபோய்
'வங்கதேசம் வங்காளிகட்கே' யென வாக்களித்து வென்றனர்
உரிமை கேட்க உமக்கு என்ன உரிமையென்று அதட்டியே...
கொடிய இராணுவத்தை வங்க நாட்டில் கொண்டு சென்று
கொட்டினன்
மிருகவெறி கொண்டலைந்த இராணுவத்து மிலேச்சரும்
மாதர் கற்பைச் சூறையாடி மனதை மாற்ற முயன்றனர்
வாலிபரை இழுத்து வந்து வதைத்துயிரை பறித்த பின்
கூறுபோட்ட உடலைச்சென்று தெருத்தெருவாய் குவித்தனர்
பேரன் பேத்தி முன்னராக பேரன் உயிரைப் பறித்த பின்....
பேத்தி முன்னே பிணத்தைப்போட்டு பெரு நெருப்பு
மூட்டினர்
தாயின் முன்னே மகளைக்கட்டி சேயின் கற்பைப் பறித்த பின்
சுக்கு நூருக வெட்டிச் சுட்டெரித்துப் மகிழ்ந்தனர்
ஆறு ஓடி அழகு செய்த அருமையான வங்கத்தில்
குருதியோடிக் குளமாய் நின்று கொள்கை விளக்கம் செய்தது
மலர் வாடை வீசி மனம் கவர்ந்த வங்கத்தில்
பிண வாடை வீச பேதையராய் பேதலித்து நின்றனர்
விருந்து தந்து மகிழ்வு கண்ட வீர வங்க மக்களை
பருந்து பலவும் பங்கு போட்டு விருந்துண்டு மகிழ்ந்தது
சேரி பலவில் தீயை மூட்டி செத்து மடியச் செய்வதால்
சீறிப் பாயும் சுதந்திரத் தீ செத்து விடுமென்றெண்ணினன்
கற்றறிந்த கனவான் மாரை கட்டி இழுத்து கொண்டுபோய்
சுட்டெரிக்கும் நெருப்பிலிட்டு சுருண்டு வேகச் செய்தனன்
கோடி கோடி உயிர்கள் தம்மை கொன்று விட்டபோதிலும்
வீர தீரர் உள்ளமென்றும் வெதும்பிச்சாக மாட்டுது
கொன்று குவித்த யஹியக்கானை தர்மத்தாயே கொன்றனள்
தங்கம் விளைக்கும் வங்கத் தாயை தர்மத்தாயே காத்தனள்
ஒடுக்கி அடக்க எண்ணும் உலுத்தர் எந்த நாட்டில் வாழினும்
வங்கம் தந்த தங்கச் சரிதம் வரிக்கு வரி படியுமின்
அடக்கி ஒடுக்கி ஆள்வதால் அழியுமோ சுதந்திரம்
அகில தேச உலகமும் அதனைப்பார்த்து நிற்குமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பைத் தமிழ் மக்கள் எப்படி எதிர்க்கலாம்?

இலங்கையை ஓர் சிங்கள பௌத்த குடியரசாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதறிந்த நம் தமிழர் ஒன்றுகூடினர். வல்வையில் சரித்திரப் புகழ் வாய்ந்த மாநாடு கட்சிபேதமின்றி நடாத்தப்பட்டது. இந்நாட்டில் எம்மினம் தனித்துவத்துடன் வாழ, எம்மால் மேலும் குறைக்க முடியாத அதிகுறைந்த பட்சக்கோரிக்கைகள் இதுவே என்று ஓர் ஒன்பதம்சக் கோரிக்கையை, சோசலிசமும், சமத்துவமும் பேசும் தற்போதய அரசாங்கத்தின் முன் வைத்தனர். அதை அடிப்படையாகக்கொண்டு அரசியல் நிர்ணய சபையே அதிரும் வண்ணம் தமிழரசு இயக்கத்தின் 13 பா. உ.க்களும் தொடர்ந்து பல நாட்களாகப் போர்க்குரல் எழுப்பினர். பல வாறுகவும், பல கோணங்களிலிருந்தும் நியாயங்களை எடுத்துரைத்து இக்குறைந்த பட்சக் கோரிக்கை நீதியானது, நியாயமானது, தவிர்க்க முடியாதது. கட்டாயம் வழங்கப்படவேண்டியது என்று கூடியவரை வாதாடினர். ஆனல் ஆணவச் செருக்குக்கொண்ட அரசு தன்னிடமுள்ள பெரும்பான்மைப் பலத்தைக் கருவியாகக்கொண்டு அத்தனை கோரிக்கைகளையும் தோற்கடித்தது. தமிழ்பேசும் மக்களுக்கு அரசியல் சட்டத்தில் எதுவித பாதுகாப்பும் அளிக்க மறுத்து விட்டது.

### தமிழரசார் கோரிக்கை

தமிழுக்கு ஒரு சிறு பாதுகாப்புத் தரும் தமிழ்மொழி விசேட சட்ட விதிகள் மசோதாவை எதிர்த்து சட்டத்தை மீறியதால் சுட்டுக் கொல்லப்பட்ட பிக்குவுக்குச் சிலைவைத்து தேசிய வீரர்கள்) உட்பட்டவையாகவும், தமிழ்ப் பிரதேசத்தின் பொருளாதார நிலமை, மக்களின் அரசியல் மனவளர்ச்சி, விடுதலை ஆர்வம் என்பவற்றை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும். எனவே கட்சியின் ஒவ்வோர் நடவடிக்கையும் மக்களால் வகுக்கப்பட்டு பா: உக்கள் முன் செயற்படுத்துவதற்காக வைக்கப்படவேண்டியவையாகும். அதன்பிரகாரம் தமிழ்பேசும் மக்களின் அடுத்த நடவடிக்கை என்ன? என்ற கேள்விக்கு பதில் காணவேண்டியவர்கள் மக்களேயாகும்;

### உடனடி நடவடிக்கை

தற்போது பாராளுமன்ற முறையாலே, அகிம்சையைப் பின்பற்றி தமிழ்பேசும் மக்களுக்கு, அரசியல் பாதுகாப்பை, மொழி உரிமையை, சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி போராடி வருகின்றது. மக்களின் அங்கீகாரம் பெற்ற இவ்வழியில் கட்சியானது அளப்பரிய தியாகங்களைச் செய்து அயராதுழைத்து வருகின்றது.

சுயநலமிகள் பலர் அரசுக்கு ஆலவட்டம் வீசி, அரசினர் போடும் பிச்சைகளுக்காக தமிழர்களின் உரிமைகளை விற்றுப் பிழைக்கும் நேரத்தில், மக்களின் உரிமைக்காக, இலட்சிய வழி நின்று எந்த அக்கிரமங்களையும் உடனுக்குடன் சுட்டிக்காட்டி எதிர்த்துக் குரல் கொடுத்து வருகின்றது எமது ளௌ நாமிருப்பதால் பயனில்லை.

### கட்சிக் கிளைகள்

மேற்கூறிய நிலையை மக்களிடையே உண்டுபண்ணுவதில் கட்சிக் கிளைகளின் பங்கு மிக முக்கியமானதொன்றாகின்றது. எமது கட்சிக் கிளைகள் விடுதலையை நோக்கி தொடர்ச்சியாக இயங்கவேண்டிய காலம் வந்துவிட்டது. கட்சிக் கிளைகள் தான் மக்களுக்கும் கட்சியின் தலைமைப் பீடத்திற்குமிடையேயுள்ள பாலமாக சுறுசுறுப்புடன் விடுதலை அடையும் வரை இயங்குதல் வேண்டும். அதற்கான ஆக்க வேலைகள் உடனே நடைபெறல் வேண்டும். தொகுதி தோறும் உள்ள தன்மானத் தமிழ் இளைஞர்கள் உடனடியாக

**எம்.ஆர்.சந்திரன்**

முன்வந்து தத்தம் தொகுதியிலுள்ள கட்சிக் கிளைகளைப் புனருத்தாரணம் செய்து இயங்கச் செய்திடல் வேண்டும். இனியும் தமிழ் இளைஞர்கள் சும்மா இருக்க முடியாது. தம்மால் இயன்றளவு நேரத்தை தமிழ் பேசும் மக்களின் விமோசனத்திற்காகச் செலவழிக்க முன்வரல் வேண்டும். ஒவ்வோர் கிராமத்திற்கு ஒவ்வோர் கிளையும் தொகுதிக்கு ஓர் மத்திய கிளையும் அமைக்கப்படல் வேண்டும்: தொகுதிப் பா: உ.க்கள் இன்றியிருந்தே கிளைகளை அமைப்பதற்கும், தல் வேண்டும். அத்துடன் பாவனையாளர்களையும் எமது உற்பத்தியைப் பாவிப்பதன் மூலம் வருவாயைப் பெருக்கி உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பாமர மக்கள் தொடக்கம் படித்த அறிவாளிகள் வரை விடயத்தைப் புரிந்து செயலாற்றும் நிலை உண்டாதல் வேண்டும்.

### ஒத்துழையாமை

தற்போதய பொருளாதார அரசியல் நிலைமையில் மக்களிடையே விடுதலை ஆர்வத்தை வளர்க்க ஏதுவாகவிருப்பதும், மக்களின் உணர்ச்சியைத் தூண்ட ஏதுவாகவிருப்பதும் அதுமட்டுமல்லாது எமது அடிமை நிலையை உலகறியச் செய்வதுமாகிய நடவடிக்கை ஒத்துழையாமையாகும், இவ்விடத்தில் ஒரு விடயத்தை ஞாபகமூட்டுவது பொருத்தமாகவிருக்கும்.

ஒரு சில வாரங்களின்முன் தமிழ்பேசும்மக்களின் பணத்தில் வயிறுவளர்ப்பதும், அரசாங்கத்தின் தமிழ்க் கூலிகளை மக்களுக்குவிளம்பரம்செய்து அவர்களை தமிழ் பேசும் மக்களின் தலைவராகக் காண்பிக்க முன்னின்று உழைப்பதுமான ஏரிக்கரை குப்பை, தினகரன் வாரஇதழில் ஓர் செய்தி வந்திருந்தது: எவ்வாறெனில் ''இலங்கை, இல்லை ஸ்ரீ லங்கா குடியரசாகும் தினத்தன்று நாடு பூராகவும் களியாட்ட விழாக்களும் கலை நிகழ்ச்சிகளும் நடாத்தி ஓர் பெருவிழாவாக அன்றைய தினத்

> ### தமிழனின் சிந்தனைக்கு!
>
> ஒரு மக்களின் ஆட்சி தங்கள் சொந்த மொழியில் இல்லாவிட்டால் அவர்கள் நிலை அடிமை நிலையாகவே இருக்கும்.
>
> 470 வருஷம் தமிழ் மக்களின் நிலை அடிமை நிலை! முதலில்பறங்கிஆட்சியிலும், ஒல்லாந்தர் ஆட்சியிலும். ஆங்கில ஆட்சியிலும் ஆளப்பட்டார்கள், இனி சிங்களத்தால் ஆளப்படுவதா?
>
> சேர்.பொ. அருணாசலமும் இராமநாதனும் இலங்கை மக்களின் சுதந்திரத்துக்காக தொடங்கிய போர் தமிழ் மக்களைப் பொறுத்த வரை இன்னும் முடிவுக்கு வரவில்லை.
>
> சிங்கள நாட்டில் இருக்கும் தமிழர் சிங்கள ஆட்சிக்குள் அடங்கினலும் தமிழ்ப் பிரதேசங்களில் கச்சேரி, கோடு அலுவல்கள், குறிப்புகள், டாப்புகள் தமிழில் இருந்தால்தான் தமிழ் இனத்துக்கு சுதந்திரம் என்று அர்த்தம்!
>
> தமிழ்ப் பிரதேசங்களையும் சிங்களப் பிரதேசங்களையும் கட்டி இணைக்குவது எப்படி? சமஷ்டி ஆட்சியே அதற்கு ஒரே வழி!
>
> —திருமதி. எச். சி. உலகசேகரம்:

துரோகிகளின் நடவடிக்கையால் வெட்கித்தலை குனிய வேண்டியதோர் நிலை ஏற்படத்தான் போகின்றது:

## ஒத்துழையாமையே அதற்குரிய ஒரேவழி!

னைப் புகழ்ந்துரைபாடிய அரசா இக்குறைந்தபட்சக் கோரிக்கைகளை வழங்குமென எதிர்பார்ப்பது? இருந்தும் தமிழரசார் தமது கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தால் பரிசிலனை செய்து வழங்கியிருப்போம் என்று அரசாங்கம் சாட்டுச் சொல்வதற்கு இடமளிக்கக் கூடாதென்பதற்காகவே தமிழரசார் பங்கு பற்றினர். தகுந்த நேரத்தில் வெளியேறினர். இதுவே சரியான நடவடிக்கை என்பதைச் சிந்திக்கத் தெரிந்த எவரும் ஏற்றுக் கொள்வர்;

எனவே, 'விடுதலையரர் திரும்பத் திரும்ப தமிழரசுக் கட்சி ஆரம்பத்திலிருந்தே பகிஷ்கரித்திருக்கவேண்டும் என்று குறை கூறுவதைத் தயவு செய்து நிறுத்திக் கொள்ளவும்.

இனி, தமிழரசாரின், ஏன் தமிழ்பேசும் மக்களின் அடுத்த நடவடிக்கை என்ன என்ற கேள்வி எழுகின்றது: அதுவே எங்கும் கேட்கப்படுகின்றது. இந்த நேரத்தில் தமிழ்பேசும் மக்கள் பின் வரும் கருத்துக்களை நன்ருக மனதில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

இலங்கைத் தமிழரசுக்கட்சி ஓர் அரசியல் கட்சி மட்டுமல்ல அது ஓர் விடுதலை இயக்கமாகும். எனவே அதன் ஒவ்வொரு நடவடிக்கையும் மக்களை விடுதலைப் பாதையிலே அழைத்துச் செல்வதாகவே இருத்தல் வேண்டும்.

அது மட்டுமல்ல கட்சியின் ஒவ்வொர் நடவடிக்கையும் தமிழ்பேசும் மக்கள் வழங்கிய அங்கீகாரத்திற்கு (ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சியின் அடிப்படைக்கொள்கை விடுதலை இயக்கம். அப்படி இருந்தும் எம்மக்களின் மொழியுரிமை, பிரதேச சுயாட்சிபோன்ற இன்னோரன்ன உரிமைகள் இன்னும் கிடைப்பதாகவில்லை: மேலும் மேலும் இருந்த அற்பசொற்ப பாதுகாப்புக்களும் பறிக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மொழி விசேட சட்டவிதிகள் இரத்தாகின்றன. திட்டமிட்ட குடியேற்றங்கள் தமிழ்ப்பிரதேசங்களில் நடைபெறுகின்றது: தாய்மொழிக் கல்வி கட்டாயப்படுத்தப்படவில்லை. தமிழ்ப்பிரதேசத்தில் நிர்வாக மொழி, என்பன தமிழில் இல்லை. மனிதாபிமானமற்ற முறையில், அநாகரிக முறையில் தமிழ் மாணவர்கள் உயர்கல்வியிலிருந்தும், உத்தியோக வாய்ப்பிலிருந்தும் புறக்கணிக்கப்படுகின்றார்கள். இவற்றிலிருந்து தப்ப நாம் உடனடி நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

நடவடிக்கைகள் எவையென ஆராயப் புகு முன் மக்களிடையே விழிப்புணர்ச்சி, விடுதலைவேட்கை, விடுதலை ஆர்வம் மன வைராக்கியம் என்பன ஏற்படல் வேண்டும் ஏற்படுத்தப்படல்வேண்டும்; அந்நிலைமைக்கு மக்கள் முதலில் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ளல் வேண்டும்: அதன் பின் அடுத்த நடவடிக்கையை மக்களே தீர்மானித்து பா. உக்கள் முன் சமர்ப்பித்தல் வேண்டும். பா. உ: தலைமைதாங்க மக்கள் அவர் பின் அணிதிரளல் வேண்டும். அதை விடுத்து 12 பா. உ.க்களும் எமது உரிமையைப் பெற்றுத் தந்துவிடுவார்க மக்களைச் செயல்படுத்தவும் தொடங்கவேண்டும்.

கிளைகள் அமைக்கப்பட்ட பின் அவை மேற்கொண்டு செய்யவேண்டிய காரியங்களை கவனிப்போம். அவசர காலச் சட்டத்தின் கீழ் ஜனநாயக உண்மைகள் மறுக்கப்பட்ட இக்கால கட்டத்தில் செய்யக்கூடிய விடயங்கள் இரண்டு உண்டு.

### பொருளாதார அபிவிருத்தி

கட்சிக் கிளைகள் ஈழத் தமிழகத்தின் பொருளாதார அபிவிருத்தியில் தீவிர கவனம் செலுத்திடல் வேண்டும். அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் மானியங்களை முற்ருகப் பயன்படுத்தி ஈழத் தமிழகத்தை உணவிலும் உபபொருட்களிலும் தன்னிறைவு பெறச் செய்தல் வேண்டும். தேசிய பொருளாதாரம் எம் கையிலேயே தங்கியுள்ளது என்றதொரு நிலைமை உண்டாகுமேயானல் நாம் விடுதலையை எண்ணி தயங்குவதற்கு யாதொரு காரணமும் இருக்காது. எனவே கிளைகள் பொதுமக்களுடன் கலந்துரையாடல் மூலமும், பிரச்சாரப் பொதுக்கூட்டங்கள் மூலமும் தத்தம் கிராமங்களின் விவசாய, கைத்தொழில் அபிவிருத்தி பற்றியும், அதற்கான வழிவகைகள் முதலியவற்றையும் போதித்து நாம் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைய வேண்டிய அவசியத்தை விளக்கவேண்டும்: இதற்கு தொகுதிப் பா. உ.க்கள் பக்கபலமாக இருந்து மக்களுக்கு [illegible] றுக்கொடுக்க ஆவன செய் தைக் கொண்டாட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கின்றது. இதையிட்டு வடமாகாணத்தில் மிக விமரிசையாக விழா நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படவிருக்கின்றது. இதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கு அரசாங்க அதிபருடன் விரைவில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கின்றன.'' இதுவே அச் செய்தி.

ஆம், ஒரு சில எட்டப்பர்களின் உதவியோடும், அரசாங்கத்தின் தமிழ் கூலிகளினது உதவியோடும், குடியரசு தினத்தை யாழ்நகரில் கோலாகலமாக கொண்டாட ஏற்பாடுகள் நடைபெறத்தான் போகின்றன. அவசரகால நிலமை. ஜனநாயகம் செயல்பட முடியாது. எவ்வித எதிர்ப்பும் காட்டமுடியாதென தமிழ் மக்கள் கைகட்டி, வாய் பொத்தி வாழாவிருக்கப் போகின்ருர்கள். ஏற்றில் விசேஷ சலுகைச் சீட்டுகள் (compliments tickets) கொடுத்தாவது (தினகரன் விழாவில் செய்ததைப்போல்) மக்களை வரவழைத்து மந்திரிமாருக்குச் ''சோ'' காட்டத்தான் போகின்ருர்கள்; தமிழ் மக்களும் தம் அடிமைத்தனத்தைச் சிந்தியாது கலைவிழாக்காணும் நோக்குடன் யாழ்நகரில குவியலாம்; மறுநாள் ஒன்றை ஒன்பதாக்கிச் சகல தினசரிகளும் கொட்டை எழுத்தில் ''யாழ் நகர் குடியரசு தினத்தை கோலாகலமாகக் கொண்டாடியது.'' ''யாழ்நகர் விழாக்கோலம் பூண்டது'' என்று பலவாறு செய்தி வெளியிடத்தான் போகின்றன. மானமுள்ள தமிழன் அத்தனை பேரும் ஒரு சில வருங்கால நிலை!

தன்மானமுள்ள தமிழ் இளைஞர்களே! ஈழத்தமிழகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தங்கத் தமிழ்க் கூட்டமே! செப்புவீர். இவ்வாறனதொரு நிலை உண்டாகப் போகின்றதென்பதைத் தெரிந்தும் தெரியாதவர்கள் போல, அறிந்தும் அறியாதவர்கள்போல் நாமிருப்பதன் மூலம் எமது வருங்காலச் சந்ததியினரை வஞ்சிக்கின்ருேமல்லவா. அவர்கள் வாழ்க்கைக்கு மண் அள்ளிப் போடுகின்ருேமல்லவா

தமிழினமே! இலங்கை சுதந்திரமடைந்தபோது அன்றைய எமது தலைவர்கள் சோல்பரிப் பிரபுவின் ஒற்றையாட்சித் திட்டத்தை எதிர்க்காது எம்மை சிங்கள ஆட்சிக்கு அடிமையாக்கியதை எண்ணிக் கண்ணீர்விடும் தமிழினமே! அதே பிழையை — இல்லை அதைவிடப் பாரதூரமானதொரு பிழையை அரசியல் திட்டத்தை (தமிழரின்மரண சாசனத்தை) ஆதரிப்பதன் மூலம் நீ விடுகின்ருயே! குடியரசாகும் மறுதினம் மேற்கூறியவாறு 'யாழ் நகர் விழாக்கோலம் பூண்டது' என்ற செய்தி வரும் பத்திரிகை உன் வருங்காலச் சந்ததியின் — வருங்கால இளைஞர்களின் — கையில் கிடைக்குமானல், உன்னை எண்ணி, உன் அடிமைத் தனத்தை எண்ணி, உனது துரோகத்தை எண்ணி அவர்கள் கண்ணீர் வடியார்களா? போன சந்ததியின் துரோகத்தை எண்ணிக் கண்ணீர் வடிக்கும் நீ உன் வருங்காலச் சந்ததியைக் கண்ணீர் வடிக்கச்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கூட்டு முன்னணி அரசு முதுகில் குத்துகிறது!

## தமிழ் பேசும் மக்களே! நீங்கள் வாழ வேண்டாமா? அநீதியைக் கண்டும் ஆனந்தப்பள்ளி கொள்வலாமா?

"As one belonging to a minority in Ceylon —the Tamils who form the second largest community — I was greatly struck by my visit to Soviet Georgia. The Georgians number only 3 million, whereas the Russians number 110 million, the Ukarians 30 million and the Uzbeks 10 million. But in Georgia, I found the people quite contented, proud of their language which is given its rightful place, and developing their hearts desire."

மேலே கூறியவை இன்றைய கூட்டுமுன்னணி அரசாங்கத்தின் அங்கத்துவக் கட்சியாகின பொதுவுடைமைக் கட்சியின் (கொம்யூனிஸ்ற்) முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான திரு. கே. வைகுந்தவாசனின் கருத்து. ஆம் இவர் "Three months in New China and Soviet union" (நவ சீனாவிலும் சோவியத் யூனியனிலும் 3 மாதங்கள்) என்ற நூலில் — பக்கங்கள் 113, 114 — இப்படிக்கூறியுள்ளார்.

காங்கேசன்துறைத் தொகுதியில் தந்தை செல்வாவுடன் முன்பு போட்டியிட்ட இவர் பற்றி இப்போது எழுதவேண்டியுள்ளது. இவர் பற்றி என்றும் கூறும்போது, இவர் சார்ந்துள்ள கொம்யூனிஸ்ற் கட்சியின் படுபிற்போக்குத்தனமான, காட்டிக்கொடுக்கும் மிகக் கேவலமான செய்கையைப்பற்றியென்றே வாசகர்கள் கருதவேண்டும்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் கூடிய யாழ் மாவட்ட கொம்யூனிஸ்டுகளின் மாநாட்டில் 'சிங்களம் மட்டும் சட்டத்தினை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி பிரசாரம் செய்யப்படுமென' தீர்மானித்துள்ளார்கள். அதாவது தமிழ்ப் பேசும் மக்களை இந்நாட்டில் எலும்பு, தசைகளாலாக்கப் பட்டோர்களாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்போகிறார்களாம் கொம்யூனிஸ்டுகள். தமிழ்ப் பேசும் மக்களை மொழி, இன, நாடு உணர்வற்ற சோற்றுப் பட்டாளங்களாக்க அரசாங்கம், வடபகுதி ஐந்தாம் படைமூலம் செய்ய முயற்சிக்கிறது:

சோவியத் ருஷ்யாவிலே மிகச்சொற்பமான மொழி பேசுவோர்களுக்கும் எல்லாவித உரிமையுமுண்டு. ஆனால் இலங்கையில் இரண்டாவது பெரிய இனத்துக்கு ஒவ்வோர் நாளும் கொள்ளி சொருகப்பட்டு என்னும் தண்ணீரும் தெளிக்கப் படுகின்றது.

திரு. வைகுந்தவாசன் கவலை கொள்ளும்போது — அதாவது உரிமைபற்றி — அவர் சகபாடிகளான வி. பொன்னம்பலம், எம். சி. குழுவினர், சிங்கள, பௌத்த மொழி, மதம் ஆகியவைகளுக்கு மேலும் மெருகூட்ட முயற்சிக்கின்றனர். "ஏன் இந்தக்கொடுமை?" எனக் கேட்டால், நாட்டில் சோஷலிசம், கம்யூனிசம் ஏற்பட்டால் மொழி, நில, தொழில் பிரச்சினைகள் இல்லாமல் போய்விடுமென மாயாஜாலம் காட்டுகிறார்கள். மொழி அழிக்கப்பட்டபின் எம்மொழியைக் காப்பாற்றப் போகிறீர்கள் எனக் கேட்டால் 'தமிழரசுக்காரரோடு கதைக்கமுடியாது' என்று மெல்ல நழுவிவிடுவார்கள்.

கொம்யூனிஸ்டுகளே! இந் நாட்டில் தமிழ்ப் பேசுமினம் பலவழிகளாலும் ஒவ்வோர் நிமிடமும் அழிக்கப்பட்டு வருகிறது: அழிக்கப்படுவோர்களுக்கு உங்கள் ஆதரவு இருக்கட்டும். அழிப்பவர்களை அழிக்க இன்றே உங்கள் போக்கை மாற்றிக் கொள்ளுங்கள்.

"பங்களாதேசம்" தமிழ்ப் பேசும் மக்களுக்கு புதுவிதத் தெம்பை கொடுத்திருக்கிறது. வயிறு கழுவும் வேலையை விட்டுவிட்டு, வளமார் தமிழ்ப்பேசும் மக்களின் சுபீட்சத்திற்குப் பாடுபடுங்கள். சரித்திரம் திரும்பும் கொம்யூனிஸ்டுகளே!

★

### தமிழ்நாடு முதல்வரின் டால்மியாபுரப்போராட்டம்

தமிழரசுக்கட்சிக்காரன் 'ஸ்ரீ'யை எதிர்க்கிறான். சிங்களம் மட்டும் சட்டத்தை, தமிழ் மண்ணில் அரசாங்கத்தினால் திட்டமிட்டுக் குடியேற்றப்படும் சிங்களக் குடியேற்றத்தை, மலைநாட்டு மக்களுக்கு இழைக்கப்படும்— கல்வி, தொழில், சுகாதாரம் உணவு போன்ற துறைகளில் இழைக்கப்படும் அநீதியை எதிர்க்கிறான்; வெற்றி கிட்டியதா? என்று தமிழ்த் துரோகிகளும் 'தினபதி' 'டெயிலிநியூஸ்' போன்ற நாளேடுகளும் தினமும் பிரசாரம் செய்து தமிழ் பேசும் மக்களின் இதயங்களில் ஒருவித செயறகைச் சோர்வை உண்டாக்க முற்படுகின்றன. இவர்கள் இந்நாட்டை ஓர் சிங்கள பௌத்த நாடாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்களே தவிர, இந்நாட்டு தமிழ் பேசும் மக்களின்மேல் கொண்ட பாசத்தினாலல்ல.

காந்தி அடிகள் ஏறக்குறைய 40 ஆண்டுகளாக சொல்லொணாக் கொடுமைகளுக்கிடையில் இந்திய மக்களுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார்; நமது தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கருணாநிதி அவர்கள் நடாத்திய 'டால்மியாபுரப் போராட்டம்' 15 வருடங்களின் பின் பலன் தந்தது. ஆம். "டால்மியாபுரம்" என்ற முழு ஹிந்திப் பெயர் அழகான 'கல்லக்குடி'யென பெயர் பெற்றது. சரித்திரம் அறியாதவர் அல்ல 'தினபதி யார்'. ஆனால் வயிற்றை நிரப்புவதற்காகச் சிங்கள, பௌத்த முதலாளிகளுக்குத் தாளம் போட்டுப் 'பிச்சை' பெறுகிறார். சோற்றுப் பட்டாளத்தின் முதல்வரெனத் 'தினபதியாருக்குப் பட்டஞ் சூட்டலாமென ஆலோசிக்கிறார்கள் நல்லூர்த் தொகுதி வாழ் மக்கள். ஆகவே இந் நாட்டில் தமிழ் பேசும் இனம் தமிழரசுக்கட்சியினரின் தலைமையில் சுதந்திரம் பெற்றே தீரும் என்பதை மக்கள் மறக்க மாட்டார்கள்.

★

### யாழ். மாநகரசபை நிர்வாகமும் அதன் வரவு செலவுத் திட்டமும்

யாழ். மாநகர சபையின் போக்கு யாழ். மக்களிடையே வெறுப்பையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது, இன்றைய இழிகேடான நிர்வாகத்தையும் அதற்குப் பொறுப்பாயுள்ளவர்களையும் அகற்றிவிட 1972 மாநகர சபைத்தேர்தலை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். பல வட்டாரங்களிலும் ஒன்றாகவே மக்கள் குழுக்களாக இயங்கி, இன்றைய நிர்வாகத்துக்கு 1972-ல் தேர்தலில் சரியான பாடம் புகட்டத் தீர்மானித்துள்ளார்கள். 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல' அண்மையில் யாழ். மாநகரசபையினர் ரூபா 10-00 அடையாள மான்யமாக ஒரு சிங்கள தட்டச்சு (Type writer) வாங்குவதற்கு ஒதுக்கியுள்ளனர்.

இந்தப்பாதகமான செயலை கந்தர்மட வட்டார உறுப்பினரும், முன்பு இரண்டு தடவைகள் மேயராக இருந்தவருமான திரு. எஸ். நாகராசா காரசாரமாகக் கண்டித்திருக்கிறார். யாழ். மாநகரசபை மேயர் சுதந்திரக் கட்சி உறுப்பினர்; அவரது மாநகரசபை உறுப்பினர்களும் கடந்த தேர்தலின்

### 'மகாமந்திரி'

பின் சு. கட்சியில் சேர்ந்துவிட்டார்கள். யாழ். மாநகர சபைக்கு ஒரு சிங்களத் தட்டச்சுத் தேவைதானா? தமிழ் பேசும் மக்கள் தீர்மானிக்கட்டும். 1972-ல் தேர்தலில் யாழ். மாநகர சபை வாக்காளர்கள் சரியான பாடம் புகட்டுவார்கள்.

தந்தை செல்வா எழுதிய தமிழ்க் கடிதத்திற்கு, மமதை மந்திரி பீலிக்ஸ் ஆங்கிலத்தில் பதில் கொடுத்துள்ளார். காரணம் கேட்டால் தந்தை செல்வாவுக்கு ஆங்கிலம் தெரியும் என்றபடியால் தான் ஆங்கிலம் பாவித்துள்ளாராம். பாராளுமன்றத்தில் ஆங்கிலம் தெரிந்த பலர் சிங்களத்தில் உரையாற்றுகிறார்கள். அப்போது எங்கே மமதை மந்திரி? ஆனால் திரு. துரோகப்பா சிங்களம் பாவிப்பதற்குத் தட்டச்சுக்கு வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கீடு; செல்வா தமிழில் எழுதினால் ஆங்கிலத்தில் பதில் உள்ளூராட்சி அமைச்சுக்குப் பொறுப்பாகவுள்ள மமதை மந்திரி பீலிக்ஸ் திரு. துரையப்பாவுக்கு ஆங்கிலத்தில் எழுதினால், சிங்களத்தில் பதில். எப்படியிருக்கிறது தமிழர்கள்— (2முஸ்லீம்கள் உட்பட) கையிலுள்ள யாழ் மாநகர சபை நிர்வாகம்? யாழ் வாக்காளர்கள் 1972ல் சிந்தித்துச் செயலாற்றினால் காட்டிக்கொடுக்கும் கும்பல் தலைதெறிக்க ஓடும்.

★

### மக்கள் குழுவும் மார்ட்டின் உரையும்

"மனச்சாட்சி" புகழ் யாழ் பா.உ. திரு. வி. எக்ஸ். மார்ட்டின் அவர்கள் மக்கள் குழுக்கூட்டம் அண்மையில் யாழ் கச்சேரியில் நடைபெற்றபோது லஞ்சம், பாரபட்சம், ஒழுங்கீனம் பற்றி விரிவாகக் குறிப்பிட்டார். மக்கள் குழுத்தலைவர்கள் முன்னுள்ள கடமைபற்றியும் அவர் குறிப்பிட்டுப் பேசும்போது லஞ்சம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கூட மக்கள் குழு, ஒழுங்கீனம், லஞ்சம், பாரபட்சம் கண்டால் சுட்டிக்காட்டலாமென்றார். திரு. வி. அருளம்பலம், திரு. துரையப்பா, ஆகியோரும் இவர் பேச்சைக்கேட்டு?

ஸ்ரீ. ல. சு. க. பாராளுமன்ற உறுப்பினரான திரு. ரெணி டி மெல் (தெவிநுவரை) அண்மையில் பேசும்போது "சைக்கிளில் வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள், போகும் போது காரில் போவதாக" கூறினார். இதில் சம்பந்தப்பட்டோர்கள் அனைவரும் சு. கட்சியை அண்டி வாழ்பவர்கள். பிரசாரம் செய்பவர்கள் கேட்பவர்கள் எல்லோரும் சு. கட்சியினர். லஞ்சம் பற்றி கோப்பாய் கோமான் உயர் திரு. குமாரசாமி வன்னியசிங்கம் ஐயா அவர்கள் ஒருமுறை பாராளுமன்றத்தில் அருமையான கருத்தொன்றை வெளிப்படுத்தினார்.

"பணம் பெறுவது மட்டும் லஞ்சம் அல்ல. நியாயமற்ற வழியில் உத்தியோகம் பெற்றுக்கொடுத்த, மறைமுகமாக ஒருவரின் உதவியைப் பெறுவது, உத்தியாக மாற்றம் புறம்பான வழியில் பெற்றுக்கொடுப்பது, கடைக்காரர்களுக்கு, தனது செல்வாக்கைப் பாவித்து லைசென்ஸ், பெர்மிற் போன்றவை பெற்றுக் கொடுப்பது கூட பாரதூரமான லஞ்சக் குற்றங்களாகும்" என்றார் அவர் கருத்து இன்று எத்தனை தீர்க்கதரிசனமாக உள்ளது:

வட கிழக்குப் பகுதியில் உத்தியோகம் பெறுதல், உத்தியோக மாற்றம் போன்றவை பற்றி தரகர்களைக் கேட்டால் நன்கு தெரியும். கல்வி எத்துணை உயர்ந்ததாக இருந்தாலும் அதனால் பலன் இல்லை; மற்றும்...... தந்திரங்களும் தெரிந்திருக்கவேண்டும்; கொம்யூனிஸ்டுகள் ஒரு புறமும், சு. கட்சியினர் மறு புறமும் தமிழ்ப்பேசும் மக்கள் முதுகில் குத்துகிறார்கள்;

★

### சமசமாஜிஸ்டுகளின் குத்துக்கரணம்.

ஏழை, நசுக்கப்பட்டவர்கள் ஆகியோருக்குப் பாடுபடுகின்றோமென மேடைகளில் கூச்சல் போட்டார்கள், மரவரியை இல்லாமற் செய்து தவறான முறைகளைக் கொண்டுவந்ததன் மூலம் சீவல் தொழிலாளர்களுக்கு படுதுரோகஞ் செய்து விட்டார்கள். முதலாளிகள் ஒழிக என்று வாய்க்கூச்சலே தவிர, செயலளவில் சமசமாஜிஸ்டுகள் முதலாளிகளின் மிகப்பெரிய காவலாளிகள்; வடபகுதியில் சிகப்புச் சட்டைக்காரர் வெகுவிரைவில் முக்காடு போட்டுக்கொண்டு மூலையில் குந்தவேண்டிய நந்நாள் நெருங்கிக்கொண்டு வருகிறது. முக்கூட்டு முன்னணி மூச்சனிகளும் மொழி ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் துரோகஞ் செய்கின்றார்கள்.

★

### தமிழ் கலைஞர்களை ஊக்குவிக்கும் இலட்சணம்

திரைப்படக் கூட்டுத்தாபனம் தமிழ் கலைஞர்களையோ தமிழ்க் கலாசாரங்களையோ ஊக்குவிக்கப் போவதில்லை: இன்று யாழ் 'விடோர்' தியேட்டரில் 'நான்கு இலட்சம்' என்ற சிங்களப் படம் தமிழில் 'டப்' செய்யப்பட்டு காட்சிதருகிறது: இனிமேல் எல்லாம் 'டப்' பாக இருக்கிறது. 'டப்' போடு 'டூப்' பும் சேர்த்து வட, கிழக்கு பகுதியில் கூட்டு முன்னணி அரசாங்க ஆதரவாளர்கள் 'ஹோப்' (Hope) காட்டுவார்கள்; ஆனால் த. பே. மக்கள் கூட்டு முன்னணி அரசாங்கத்திற்கும், அந்தரத்தில் தொங்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் 'டீப்' (Deep-ஆழம்) பான தங்களது வெறுப்பின் மூலம் 'டப்' செய்யப்பட்ட படங்களை தியேட்டரை விட்டு ஓட்டி விடுவார்கள்;

தமிழ்பேசும் மக்களே! நீங்கள் அனார்கலி, வீரபாண்டிய கட்டப்பொம்மன், ஔவையார், நாடோடி மன்னன், மந்திரிகுமாரி போன்ற தரமான படங்களை அதிக நாட்கள் காணமுடியாது. திரைக் கூட்டுத்தாபனம் த. பே. மக்களின் கலாசார உணர்ச்சியை கூட்டோடு கைலாயத்துக்கேற்றிவிட்டது.

தமிழ் நாட்டிலிருந்து சஞ்சிகைகளை இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செலவாணித் தட்டுப்பாடு என வங்கி கைவிரிக்கிறதாம். குமாரசூரிய(ரி)வின் பேருதவியால் தமிழ்ப் பேசும் மக்களின் அறிவு தடைப்பட்டு நின்று தவளையாகிவிட்டது. குமாரசூரியர் கொம்யூனிஸ்டுகள், கைலாசபதி 'தினபதி' சேவையை மக்கள் என்றென்றும் மறக்கமாட்டார்கள்: ஆம்! தகுந்த நேரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

(11ம் பக்கம் பார்க்க)

### தமிழரசுக்கட்சியின் தலைமைப்பதவியை இதுவரை வகித்து வந்தோர் பட்டியல்!

முதலாம், இரண்டாம் மாநில மாநாடுகளின்போது தந்தை செல்வா தலைமைப் பதவியை ஏற்றிருந்தார்.

மூன்றும், நான்காம் மாநாடுகளின்போது அமரர் வன்னியசிங்கம் தலைமையை ஏற்றார்;

ஐந்தாவது மாநாடு பண்டா, செல்வா ஒப்பந்தம் பற்றி ஆராயும்சிறப்பு மாநாடாக நடைபெற்றது. இதில் தலைவர் தெரிவு நடைபெறவில்லை—

ஆறாவது மாநாட்டின் போது அமரர் இராசவரோதயம் கட்சித்தலைவர்.

ஏழாவது, எட்டாவது மாநாட்டின் போது அடுத்தடுத்து திரு. சி. மூ. இராசமாணிக்கம் தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டார்.

ஒன்பதாவது மாநாட்டின் போது தந்தை செல்வா மீண்டும் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

பத்தாவது மாநாட்டின் போது அமரர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைவரானார்.

பதினோராவது மாநாட்டின் போது திரு. சி. மூ. இராசமாணிக்கம் மீண்டும் தலைவரானார்.

12 வது மாநில மாநாட்டின் போது தெரிவு செய்யப்பட விருக்கும் புதிய தலைவர் யார்?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவும் தமிழரசு மாநாடுவழிகோலவேண்டும்!

## தமிழரசுக் கட்சியிடம் மலையகத் தமிழர் சார்பில் ஒரு கோரிக்கை!

இலங்கை வாழ் தமிழ் மக்களின் தலை விதியை நிர்ணயிக்கும் வகையில் எதிர்வரும் தை மாதம் தமிழரசு கட்சியின் மாநாடு நடக்க விருப்பது எமக்கு மகிழ்ச்சியை தருகிறது. அதே சமயம் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வு காண வேண்டும் என்பதே கட்சியின் மேலிடத்தாருக்கு எமது வேண்டுகோளாகும்.

### மலையகத்திலே........

மலையகம், வடக்கு, கிழக்கு என்று பிரிவு பட்டு கிடக்கும் நாம், முதலில் நமது சில்லறை பிரச்சினைகளை தீர்த்துக்கொண்டு ஒன்று படுவோமானல் எந்த அரசாங்கத்தினையும் ஒரு ஆட்டு ஆட்டி விடலாம். நமது போராட்டங்கள் பல முழுமையாக வெற்றி பெருமைக்கு முதல் காரணம் நம்மில் ஒற்றுமை இல்லாமையேயாகும். ஆகவே முதலில் ஒன்றுபடுவோம். பின் போராடுவோம்.

மலையக மக்களில் 5¼ லட்சம் பேரை இந்தியாவிற்கு அனுப்பவும், இலங்கையில் 3 லட்சம் பேருக்கு பிரஜா உரிமை வழங்கவும் சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தில் ஏற்பாடாகி உள்ளது. இதன்படி இதுவரை சுமார் ஒரு லட்சத்திற்கு மேற் பட்டோர் இந்தியாவிற்கு சென்றுள்ளனர். இன்னும் எத்தனையோ லட்சம் பேர் இலங்கையில் அடிமையாய் இருந்து சாவதை விட இந்தியாவிற்கு சென்று சுதந்திரமாய் செத்து மடிவோம் என்று புறப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

வருங்காலத்தில் மலையகத்தில் தமிழரின் ஜனத்தொகை குறைந்து விடும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இப்போது முதலே மலையக தலைவர்கள் சென்ற காலத்தில் தவறு செய்திருந்தாலும் வருங்கால நலனை முன்னிட்டு அவர்களையும் உங்கள் மாநாட்டுக்கு அழைத்து மலையக மக்கள் பிரச்சினையில் உங்கள் கொள்கை என்ன? அவர்களின் கொள்கை என்ன? என்பவைகளை அலசி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவது அவசியமாகும்.

மலையக மக்களின் சரித்திரத்தை ஆராயும் போது 1825ம் ஆண்டு தான் முதன் முதல் இந்திய தொழிலாளர்களை இலங்கையில் தொழிற் புரட்சியை ஆரம்பிக்க ஆங்கிலேயரால் அழைத்து வரப்பட்டனர். இன்றைய நிலை! இலங்கையை பொன் விளையும் பூமி ஆக்கியபின், ஆங்கிலேயர் ஆட்சி ஒழிந்து மக்கள் ஆட்சி ஆரம் பித்தபின் மலையக மக்களை பரிதாபகரமான முறையில் நாடு கடத்துகின்றனர். இந்த நாடுகடத்தலுக்கு 'புனர் வாழ்வு' என்று புது மகுடமிட்டு இந்திய மண் வாசனையே அறியாத அப்பாவி மக்களை இந்தியாவிற்கு அனுப்புகின்றனர். இந்த புனர்வாழ்வு எவருக்ும் உருப்படியாக கிடைத்திருப்பதாகதெரியவில்லை.

அதே போல் 5¼ லட்சம் பேர் வெளியேறும் அதே சமயத்தில் 3 லட்சம் பேருக்கு இலங்கை பிரஜா உரிமை அளிப்பதாக ஒப்பந்தம் கூறுகிறது. ஆனல் இலங்கை பிரஜையாக மனுப்போட்ட ஒருவர் பிரஜா உரிமை பெறுவதற்கு உள்ள கஷ்டங்கள் கணக்கிலடங்கா, பலரின் விண்ணப்பங்கள் அநீதியான முறையில் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கு தொழிற் சங்கங்கள் எடுத்த நடவடிக்கைகள் ஏதும் பயனளித்ததாக தெரியவில்லை.

1947ம் ஆண்டு நடைபெற்ற முதல் பொது தேர்தலில் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்த மலையக மக்களின் வாக்குரிமையை பறித்து 15 லட்சம் மக்களுக்கு பிரதிநிதித்துவப் படுத்த ஒரு நியமன பிரதிநிதியை நியமித்துள்ளனர் சிங்கள ஆட்சியினர். 15 இலட்சம் மக்களின்

**எஸ். தியாகசேதுபதி**

பிரதிநிதியாக ஒரு இந்திய தமிழரை நியமிப்பதற்கு பதில், போயும் போயும் ஒரு பாகிஸ்தானியரை நியமித்துள்ளனரே என்ன வேடிக்கையான செயல்?

நாம் 15 இலட்சம் பேர் வாழுகின்ற போதே நமது உரிமைகளை வழங்காத சிங்கள ஆட்சியினரா அதில் பாதிபேர் பாரதத்திற்கு பயணமானபின், வழங்கப் போகின்றனர்! ஆகவே நாம் தமிழர் என்ற முறையில் உரிமைப்போருக்குஒன்று படுவது அவசியமாகும். இதனல் மலைநாட்டான் என்ற தனித்துவம் போய்விடுமே என்ற கவலை நமக்கு தேவையில்லை என்பதையும் நமது மக்களுக்கு சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

எதிர் வரும் தமிழரசு கட்சியின் மாநாட்டில் தமிழர்களின் பிரச்சினைகளை நோக்கும்போது மலையக மக்களின் பிரதிநிதிகளையும் அழைத்து தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்படி மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். நமது நாட்டில் தமிழர்களுக்கு இழைக்கப் படும் அநீதி வேறு எந்த நாட்டிலுமே காணமுடியாது. பொறுத்தது போதும் இனி பொங்கி எழவேண்டியது தான்.

அரசியல் வாதிகளின் அந்தஸ்துக்காக அரசியல் அதிகாரத்தை கைப்பற்றி ஆட்சி புரியும் ஆசையால் மனித தர்மம் மறைந்து விட்டது. இதற்காக நாம் பயப்பட போவதில்லை. மனிதனுக்கு மனசாட்சி உண்டு. அந்த மனசாட்சியை முன் வைத்து நமது உரிமைகளுக்காக நாம் தொடர்ந்து வாதாடுவோம், போராடுவோம். சிங்கள இனவெறியர்களுக்கு சாட்டையடி கொடுப்போம்.

தமிழரசு மாநாடு ஈழத் தமிழரை ஒன்றுபடுத்தி உரிமை போராட்டத்திற்கு வழி காணும் ஒரு மாநாடாக அமைய வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

## மாணவர் பக்கம்

### தமிழினத்தின் இழிநிலை துடைத்திட எம்மாலானதைச் செய்வோம்!

ஆதியிலிருந்து அடிபணியாது அறநெறியை வளர்த்து அரசாண்டானும் தமிழன். ஆனல், எங்கிருந்தோ வந்த விஜயனின் வாரிசுகளால், தற்போது தன்மானமின்றி அடிமை வாழ்வில் அமிழ்ந்து அகதிகளாகஆளப்படுகிறன். என்னே கொடுமை: 'எண்ணெய்ச் சட்டிக்குள் தப்பி அடுப்பிற்குள் விழுந்தாற் போல' அடிமை தளை அறுத்ததினுல் ஆங்கிலேயரிடம் தப்பி தற்போது 'சிங்களவர்' என்னும் சிறையில் சித்திரவதைப்படுகிறன்;

தமிழனுக்கெதிராக தமிழினத்தை ஒழிக்க சதித்திட்டம் போட்டது ஆட்சிபீடம்! உள்ளொன்று புறமொன்று கூறும் ஆட்சியாளர்களை பச்சோந்திகளும் இப்பச்சோந்திகளின் வாரிசுகளும் முழுக்க முழுக்க நம்பி வஞ்சக வலைக்குள் சிக்குண்டன.

'எங்களை ஆட்சிக்கு விடுங்கள் இரண்டு கொத்து அரிசி வழங்குவோம். தமிழுக்கு உரிமைகள் சில வழங்குவோம், வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்போம் நாட்டை சுபீட்சப்பாதையில் வெற்றி நடை போட வைப்போம்' என மேடைக்கு மேடைஅரற்றினர்கள் ஆளுங் கட்சியினர் தேர்தலின் போது.

படிப்பறிவில்லா, பாமர மக்களும், அறப்படித்த அறிவாளிகளும், பணம் படைத்த பணக்காரரும் பேச்சில் மயங்கி அரசாட்சிக்கு ஐக்கிய முன்னணியை அனுப்பினர்கள்;

தமிழுணர்ச்சி உள்ள ஒரு சில அறிவாளிகள் தமிழன்னையின் ஏகப் புதல்வர்கள் தமிழரசுக் கட்சி என்னும், 'எவருக்கும் அடிபணியாத கட்சியில்' இருந்து கொண்டு சிங்கள சர்வதிகாரத்தை எதிர்த்து வருகிறர்கள்.

ஏன் தமிழரின் உரிமைக் குரலான 'சுதந்திரன்' கொதித்தெழுந்து கோபக் கனல் தெறிக்க தமிழரசாருடன் சேர்ந்து உரிமைக் குரலெழுப்பி சர்வாதிகாரத்தை தகர்த்தெறிந்து வருகிறது.

தங்கள் பக்கமுள்ள ஒரு சில பச்சோந்திகளுக்கு உயர் பதவிகள் கொடுத்து தங்களை நல்லவர்கள் எனக் காட்டியது ஐ. மு. அரசு. ஆனலும் தமிழை ஒழுக்க அரசு பல சூழ்ச்சி திட்டங்கள் வகுத்து அதை வேறு முறையாக மக்களுக்கு விளக்கி செயல் முறைப்படுத்தி வருகிறது. அதன் காலை நக்கும் ஒரு சில பத்திரிகைகள் அரசுக்கு தாளம்போடுகின்றன.

ஆனல் தமிழ் மக்களின் உரிமைக்குரலான 'சுதந்திரன்' எவருக்கும் அஞ்சாது அம்பலப்படுத்துகிறது அரசின் குட்டை. இதனல் பயந்த அரசு வேறு காரணத்தைக் கொண்டு புரட்சி வீரன் 'சுதந்திரன்' ஆசிரியர் கோவை—மகேசனைக் கைது செய்தது. ஆனல் உணர்ச்சி உருக்கொண்டு தமிழ் மக்கள் கொதித்தெழவே அரசாங்கம் 'சுதந்திரன்' ஆசிரியரை விடுதலை செய்தது.

தமிழனை அழிக்கும் சதித்திட்டத்தை பலவகைகளில் செயல் படுத்துகிறார்கள் அதிலே, இனவெறியை உண்டாக்கும் தரப்படுத்தலும், இந்திய வானெலிச் செய்திகளை கலைப்பதற்காக கலைப்பு நிலையங்கள் வடக்கிலும், கிழக்கிலும் நிறுவுதலும், அடங்கும். இதைப் போல பல திட்டங்கள் செயற்படுத்தப் படுகின்றன;

அரசாங்கக் கட்சிக் கொள்கைகளை ஆதரித்து தமிழையும் தமிழினத்தையும் தன்மானமின்றி குழிதோண்டிப் புதைக்கும் சில எட்டப்பர்கள் அரசாங்கக் கட்சியிலே சேர்ந்ததால் சிலர் அமைச்சராகவும், உதவி அமைச்சராகவும் பணியாற்றுகின்றார்கள்.

ஏன் இவர்கள் படிப்பறிவில்லாதவர்களா? படிப்பறிவுள்ள இவர்களுக்கு ஐக்கிய முன்னணியின் நாடகங்கள் புரியாதா அல்லது தெரியாதா? புரிந்து கொண்டும் தெரிந்து கொண்டும் கண்மூடித்தனமாக இருக்கிறார்களே.

தமிழர்களுக்கு மட்டுமல்ல முஸ்லீம்களுக்கும் கூடவே இவ்வரசாங்கம் தீங்கிழைக்கிறதே உங்கள் கண்களெங்கே, அமைச்சர்களே! உங்கள் இனமே இவ்வாறு அவஸ்தைப்படுகிறது. பதவிக்காக ஆசைப்படும் உங்களை மக்கள் ஏற்பார்களோ?

மட்டுநகர்,
தெய்வேந்திரராஜா.

தமிழையும் தமிழனையும் ஈழமணித் திருநாட்டில் வாழவிடாது சதிசெய்யும் அரசாங்கத்தை மக்கள் அறிவார்கள். எப்படித்தான் இவ்வரசாங்கம் தன் சதியை மறைக்க முற்பட்டாலும் பற்பல உதாரணங்களில் அரசைப் புரிந்துகொண்டார்கள் மக்கள்!

அன்று தமிழுக்கு இலக்கணம் வகுத்தவரும் உலகப் புகழ் பெற்ற பேச்சாளரும் தமிழினத்தின்காவலருமான பேரறிஞர் அண்ணா காலமான போது தமிழினம் அழுதது-ஆழ்த்துயரில் ஆழ்ந்தது ஏன் உலகத்தில் பல பாகங்களிலும் துக்கம் அனுட்டிக்கப்பட்டது தலைவனை இழந்த தமிழினம் 'வெயிலினிற் புழுப் போல் துடித்தது' ஆனல் அண்டை நாடாகிய இலங்கையிலோ அரை நாள் விடுமுறை கூட கொடுக்கப்படவில்லை;

ஆனல் அண்மையில் பல நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள எகிப்திய நாட்டின் ஜனதிபதி நாஸர் இறந்ததும் இரு நாட்கள் துக்கம் அனுட்டிக்கப்பட்டு விடுதலை வழங்கப்பட்டது; இதுமட்டுமல்ல ஆட்சிக்கு வந்ததும் புரட்சிக் கவிஞனின் 'சிந்து நதியின்...' என்னும் பாடலில் 'சிங்களத் தீவினிற்கோர் பாலமமைப்போம்' என்ற சொற்றொடர்களை அகற்றினர்கள். இவைகளிலிருந்து என்ன விளங்குகிறது? தமிழினத்தை அழிக்க ஏற்படுத்தப்பட்ட திட்டம் மக்களுக்கு கண்ணடி போல் தெட்டத்தெளிவாய் விளங்குகிறது.

எனவே தமிழினத்தின் இழி நிலையைத் துடைத்திட மாணவர்களாகிய நாம் எம்மாலானதைச் செய்வோம்.

## மாணவர் முன்னேற்றக் கழகம்!

மொழி, இன விடுதலை உணர்ச்சி மிகுந்த தமிழ் பேசும் மாணவர்களை அனைத்திலங்கை ரீதியில் ஒன்றுபடுத்தி ஒரு கட்டுப்பாடான இயக்கமாக 'இலங்கைத் தமிழரசு மாணவர் முன்னேற்றக் கழகம்' எனும் ஓர் அமைப்பை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன;

இந்த அமைப்பில் சேர விரும்பும் மாணவ மாணவிகள் தங்கள் பெயர், வயது, படிக்கும் வகுப்பு, பாடசாலையின் பெயர் ஆகிய விபரங்களுடன்,

'அமைப்பாளர்
இலங்கைத் தமிழரசு
மாணவர் முன்னேற்றக்
கழகம்'
194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

எனும் முகவரிக்கு எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## இன முழக்கம் மீண்டும் கேட்கும்!

துடிப்புமிக்க இளைஞர் திரு. வே: செழியன் அவர்களை ஆசிரியராகக்கொண்ட 'இன முழக்கம்' ஏடு மீண்டும் தைத் திங்களில் மலர இருக்கிறது.

இன முழக்கம் தனது 16 வது ஆண்டு மலருடன் மீண்டும் இனத்துக்கு தொண்டாற்ற வருகிறது. மலர் வெளியீட்டுவிழா 22-1-72ல் யாழ் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாறச் சொன்னது நானே?

## இ. என். ராசா

நடுநிசி ஒரு மணி; முன் நிலவும் தன் கால எல்லை முடிந்து வான வெளியை விட்டு விலகி ஓய்வு எடுத்துக்கொண்டதால் உலகம் முழுவதும் பேய் இருட்டில் குமைந்து கிடக்கிறது: மெல்லிய இளங்காற்று கள்ளன் பதுங்குவதைப்போல் அதிக ஓசையின்றி மெல்ல மெல்ல வீசிக்கொண்டிருக்கிறது; உயரத்தால் குறுகிளைகளால் பரவி முற்றத்தில் நின்ற 'நைட் குயின்' பூமரம் மலர்களைச் சிந்தி மணம் பரப்பிக்கொண்டிருக்கிறது.

இந்த இக்கட்டான -இருள் நிறைந்த நேரத்திலேதான் நைட் குயின் மரத்தின்கீழ் இரண்டு மனித உருவங்கள் சந்திக்க முற்படுகின்றன; ஒன்று ஆண். மற்றது பெண்;

பெண் உருவ நெஞ்சத்தில் ஏக்கமும் பயமும் பெருகி உடம்பெல்லாம் வெயர்வை பொங்கிவழிய குனிந்த தலை நிமிராமல் நிற்கிறது.

பயமும் பதட்டமும் இருந்த போதிலும் அதையும் மீறிய அசுரவேகம் நெஞ்சத்தில் ஒலிக்க, ஏதோ ஒரு காரணத்தைத் கேட்டு, அதிற் தீர்வு பெறவேண்டுமென்னும் எண்ணப் போராட்டம் வலுக்க அதை அணைக்க முயலுகிறது ஆண் உருவம்.

நேரம் தளர்நடையில் நகருகிறது. தங்கள் காரண காரியங்கள் முடிவுற்றதும் வெட்கத்தோடு விலகிச்செல்கின்றன அவ்விரண்டு உருவங்களும்;

★

தொழில் முடிந்து வந்த மகேசன் செல்லம் என்று குரல் கொடுத்தான்: சிரித்த முகத்தோடுதேனீர் கொண்டு வந்து கொடுத்தாள் செல்லத்தின் தங்கை ராசம்.

இந்த நேரத்திற்தான் தன் அத்தான் வருவார் என்பதை வழக்கத்திற் தெரிந்து வைத்திருந்த ராசத்திற்கு அவன் வந்த உடனேயே தேனீரை அவன் கையிற் கொடுப்பது பழக்கமாகிவிட்டிருந்தது.

இன் முகம் காட்டித் தன்னை வரவேற்கும் தன் மனைவி செல்லம் பிரசவத்தை முன்னிட்டு மூலையில் முடங்கிவிட்டதால் வீட்டுப் பொறுப்புக்கள் ராசத்திற்குப் பெருகிப் போனதை எண்ணிப் பெருமூச்செறிந்தான் மகேசன்; அவன் விட்ட பெருமூச்சின் அடித்தளத்தில் ஏதோ ஒரு குறையின் சுவடும் பதிந்திருந்தது.

ராசத்திற்கு ஒரு நல்ல மணமகனைத் தேடும் பொறுப்பு தன்னைச் 'சார்ந்திருப்பதை ஒருமுறை எண்ணிக்கொண்டான் அவன்;

''உங்களோடு தொழில் பார்க்கும் எதிர் வீட்டுக் கணேஷ் எப்போதோ வந்துவிட்டார் நீங்கள் வர ஏன் சுணக்கம்?'' என்று கேட்டாள் ராசம்;

'அவன் தனி மனிதன் வேலைக்கு வந்துவிட்டான் நான் குடும்பக்காரனாயிற்றே சாமான்கள் எதுவும் வாங்க வேண்டாமா?' என்றான் மகேசன்.

தேனீரைக் குடித்துவிட்டு செல்லம் படுத்திருந்த அறைக்குச் சென்றான் மகேசன் குழந்தையை அணைத்தபடி படுத்திருந்த செல்லம் தன் கணவனைக் கண்டதும் எழுந்து உட்கார்ந்து 'வாருங்கள் அத்தான்' என்றாள்;

'செல்லம், உடம்பு சுகந்தானே!'

'எனக்கொரு குறையும் இல்லை, நீங்கள்தான் சாப்பாட்டு விஷயத்தில் எப்படியோ?'

'அத்தான் சாப்பிடச் சோர்ந்தாலும் நான் விடுவேனா அக்கா' என்று கூறிக்கொண்டு வந்தாள் ராசம்.

'செல்லத்திற்கு நீ தங்கையல்லவா?' என்று சிரித்தான் மகேசன்.

அடுப்பில் எதையோ வைத்துவிட்டு வந்த ராசம் அவசரமாக அடுப்படிக்கு ஓடினாள்.

'ராசத்தின் கலியாண விஷயமாக தரகர் கந்தசாமியிடம் கதைத்திருந்தேன் அல்லவா. ஒழுங்குசெய்திருப்பதாக இன்று கடிதம் அனுப்பியிருக்கிறார் இன்னும் இரண்டு தினங்களில் பெண்பார்க்க வருகிறார்களாம்' என்று தன் மனைவிக்குச் சொல்லிப் பூரித்தான் மகேசன்.

அடுத்த நாள் செல்லம் இதைத் தங்கைக்கு சொன்னபோது 'என் கல்யாணத்திற்கு இப்போது என்ன அவசரம் அக்கா! என்று உள்ளத்தை எங்கோ தள்ளி வைத்துப் பேசினாள் ராசம்.

இரவு நித்திரையே வரவில்லை ராசத்திற்கு. நாளை தன்னை பெண்பார்க்க வரப்போகிறார்களே என்ற ஒருவித வெறுப்பின் குமைவும் இதயத்தைக் குறடு போட்டு முறுக்கினாற் போல் ஒரு வேதனையும் நிழலோடி அதிக நேர விழிப்புக்குப் பின் எப்படியோ உறங்கிப் போய் விட்டாள் ராசம்.

காலையில் எழுந்த போதும் உற்சாகம் குன்றிக் காணப்பட்ட ராசம் தன் எண்ணக் குருவளிக்கு அப்பாற்பட்ட ஒரு பிரச்சினை தன்னை எதிர் நோக்கியிருப்பதில் வெறுப்பும் வேதனையும் அடைந்தாள். அது உடலிலும் பரவினாற்போல் முகம் வெளுறி கைகால் சோர்ந்து நடைப் பறவையாகத் தோன்றினாள்.

பத்து மணியளவில் பெண் பார்ப்பதற்கு ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். முதலில் தரகர் கந்தசாமி ஹி...ஹி...என்று சமாளிக்கும் சிரிப்போடு உள்ளே நுழைந்தார். தொடர்ந்து மாப்பிள்ளை அவர் தாய் தந்தை ஆகிய மூவரும் வந்தனர்; இரு [illegible] பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்ததும் [illegible] கிழமை கல்யாணநாள் இருப்பதாக ஞாபகப்படுத்தி இரண்டு பகுதியினரும் சரிஎன்று உடன்பட்டுக் கொண்டதால் அன்றைக்கே கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று கூறி முடித்தார் தரகர் கந்தசாமி.

இரு பகுதியினரும் சம்மதம் தெரிவித்து மகிழ்ந்த அதே நேரத்தில் சுவரோரமாகச் சாய்ந்து நின்ற ராசம் தொப்பெனக் கீழே விழுந்தாள். அனைவரும் திகைத்துவிட்டனர். மகேசன் ஓடிச் சென்று வைத்தியர் ஒருவரை அழைத்து வந்தான். வைத்தியர் சொன்ன தகவலோ அனைவரையும்மேலும்திகைப்படையச் செய்தது.

''கர்ப்பவதியா?'' என்று எழுந்த மாப்பிள்ளை வீட்டார் மெல்ல நழுவத் தொடங்கினர்.

''பரிகாசமாகவே கடித்த பாம்பு பலபேர் அறியவே மெத்த விங்கி...!

பாம்பாட்டிச் சித்தர் பாடலின் முதலடியை வாய்க்குள் முணுமுணுத்த கந்தசாமி மகேசனை வெறுப்பின் சாயலோடு பார்த்துவிட்டு வெளியேறினார்.

''உன்னைக் கெடுத்தவன் யாரம்மா? உண்மையைச் சொல்! என்று துள்ளிக் கொண்டிருந்தான் மகேசன்.

சிறிது விழிப்பாயிருந்த ராசத்தின் கண்கள் மீண்டும் மூடிக் கொண்டு நீரைப் பெருக்கின.

''பாதகி எங்கள் வம்சத்தைக் கெடுக்க வந்தவளே நீ உயிரோடு இராதே செத்துப் போ'' என்று கூச்சலிட்டு அழுதாள் செல்லம்;

உள்ளம் காயம் பட்ட மகேசன் அங்குமிங்கும் உலாவினான். திடீரென உள்ளே ஓடிப் போனவன் ராசத்தின் உடுப்புப் பெட்டியிலிருந்து ஒரு கடிதத்துடன் வந்தான்; அது ஒரு காதல் கடிதம் எழுதியவன் பெயர் அதில் குறிக்கப்படவில்லையாயினும் அதன் சாராம்சம் அவனைப் புலப்படுத்திற்று அதேஎழுத்துக்களை ஒருமுறையல்லப் பலமுறை அவன் கண்டிருக்கின்றான். தன்னோடு வேலை பார்க்கும் ஒருவனின் கையெழுத்துக்கள் அவனுக்குத் தெரியாதா என்ன!

வேகத் துடிப்போடு வெளி வாசலை நோக்கி நடந்தான். மயக்க நிலையிற் கிடந்த ராசத்தின் விழிகள் மீண்டும் திறந்தன. ''அத்தான் போகாதீர்கள் நில்லுங்கள்!'' என்று தளர்ந்த குரலிற் கூவிக்கொண்டிருந்தாள் அவள்.

அவன் எதையும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை நடந்து கொண்டேயிருந்தான். வெளிக் கதவைத் தாண்டியதும் கால்களுக்கு விலங்கிட்டாற்போல ஓய்ந்து நின்றான்.

எதிர் வீட்டினுள் இருந்து வந்து வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கிய ஒருவரிடம் எதிரே வந்தவர் கேட்டார். ''கலியாணமெல்லாம் நடந்தாச்சா?''

''ஓ...தாலி எல்லாம் கட்டி முடிஞ்சிது. கணேசுக்குப் பொருத்தமான பெண்;

(11ம் பக்கம் பார்க்க)

# தாவரத்தின் கேள்வி தமிழனுக்குப் புரியுமா?

தமிழ் இனத்துள் விடுதலை எண்ணம் வீழ்ந்துவிட்டது; அந்த இனத்துள் மனிதக்களை மலிந்து விட்டது ''எங்களைப் போல'' என்று சொன்னது கோரைப் புல்லு,

தமிழ் மண்ணில் மழை வீழ்ச்சி குறைந்து விட்டது. நெற்பயிரை விட நாங்கள் பெருகிவிட்டோம்; அவற்றிலும் பார்க்க உயர்ந்து விட்டோம்: எல்லாப் பசளைகளையும் முற்றாக உறிஞ்சி நன்றாகப் பெருப்போம்'' என்று இறுமாப்புடன் சொன்ன கோழிச் சூடன் வாய்விட்டுச் சிரித்தது

இவற்றின் அகம்பாவத் தொனியைக் கேட்டு அசந்து போய் இருந்தாலும், அறிவின்மையை எண்ணி வேதனைப்பட்டது நெற்பயிர்;

வானம் இருண்டது: இலேசான குளிர் காற்று வீசியது: மழை தூறியது; பெருமழை கொட்டியது. இரண்டு நாட்கள் ஓயாத மழை. வயல்களுக்குள் நீர் தேங்கி நின்றது, மப்பும் மந்தாரமும் கலந்து வானம் வெளுத்தது.

காலம் வரும் எனக் காத்திருந்த நெற்பயிர் கடும் மழை கண்டு கண் கலங்கியது. அதனருகில் இருந்த கோரையும் கோழிச் சூடனும் நடுவயதில் பிடுங்கப்பட்டு மாடுகளுக்குத் தீனியாகப் போடப்பட்டிருந்த காட்சி அதன் உள்ளத்தை உருக்கியிருக்கவேண்டும்.

''எனக்குள் களையை வைத்திருக்கப் பொறுக்காது இத்தமிழன் தன்னினத்துள் எத்தனை மனிதக் களைகளை வைத்திருக்கின்றான்:'' தமக்கொரு நீதி எமக்கொரு நீதியா? என்று கோபாவேசத்துடன் குரல் எழுப்பியது நெற்பயிர்,

தாவரத்தின் கேள்வி தமிழனுக்குப் புரியுமா?

—சிவம் பரமநாதன்
முல்லைத் தீவு

# எண்ணத் துளி!

பாண்டியூரன்

பூப்பெய்தி நிற்கும்
புதுக்குமரி போலென்னைப்
பார்க்கும் உரோசா மலரே!
பல நாளும்
ஊக்கமாய் உன்னை
உயிர்போலக் காதலித்தேன்
ஆர்க்கும் உனது
அழகில் ஒரு கண்ணே!

காலைப் பனியில் உன்
கன்ன விளிம்புகளில்
வேர்த்துள்ள முத்து
விரகக் கனல் மூட்ட
வேலை மறந்து......
விறைந்து......
உருக மர்ந்து......
சோலைத்தென் றல்போல்
வருடி இதம்கொள்வேன்!

மொட்ட விழ்ந்து நாணி
முகம் தாழ்த்தி நிற்கையில் உன்
கட்ட விழ்ந்து போகும் என்
கைதழுவும் அக்கணமே!
ஆவல் மனத்தில்
அலைமோத எப்பொழுதும்
காதலித்துத் தொட்டெனது
கையில் தழும்பேற்றேன்!

மிக்க சுகந்தம் விரவு,
நுனி மூக்கின்
பக்கத்தே வந்து
பலதடவை முத்தமிட்ட
ரோசாவே!
வேறு சுகமென்ன நீயளித்தாய்...?

அந்த அவரைக்கு,
ஆறிலொரு பங்கேனும்
உந்தன் அடிக்கேபோல்
உரமேதும் போட்டேனு...?
ஆறு கிழமை முதல்
ஆய்ந்த அவரைக்காய்
சோற்றுக் குகந்தசுவைச்
சுண்டல், கறியாகி
நற்றெடுத்து நாவில்
உருசி யளித்தது போல்

மிக்க சுகந்தம் விரவ நுனிமூக்கின்
பக்கத்தில் வந்து பல தடவை முத்தமிட்ட
ரோசாவே வேறு சுகமென்ன நீயளித்தாய்?

இந்த வயிற்றில் எழும்பும் பசிதீர்க்க
அந்த மணமும் அழகும் உதவிடுமோ...?

நேற்று மலர்ந்த நினைவில் மயக்கேறி,
போற்றல் புனைந்தேன்; பூழ்தியிலே
வீழ்ந்தின்று
காற்றில், சருகில், கலந்து மறைந்தாய் உன்
தோற்றமொன்றே எண்ணத் துளி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிற்பவை



டொக்டர் நாகநாதனைச் சுரண்டிப் பிழைத்த நண்பர்கள் சிலர் இருந்தாற்போன்று வாழ்ந்து கெட்ட நாகநாதனுக்காக வருத்தப்பட்ட உண்மையான நண்பர்கள் சிலரும் இருந்தார்கள்.

தமிழரசுக்கட்சியை நிறுவிய மூத்தோர்களில் ஒருவரும் தமது செல்வத்தில் ஒரு பகுதியை ஏதேனும் வர்த்தகத் துறையில் முதலீடு செய்யாமல் எதிர்காலத் தமிழ்த் தலைமுறையின் இலாபங் கருதித் தமிழரசுக்கட்சியில் முதலீடு செய்ய முன் வந்தவரும், டொக்டர் நாகநாதனுடன் இணைந்து கட்சியின் அமைப்பு வேலைகளைக் கச்சிதமாக நிறைவேற்றியவருமான டொக்டர் பரமநாயகம் இவர்களுள் ஒருவராவர். தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலத் தலைமுறையினர் என்ஞே ஒரு நாள் சுதந்திரக் குடிமக்களாகச் சுகித்திருக்கும் வேளையில் இப்பெரியாருக்கு வட்டியும்முதலுமாக நிறைய நன்றிக்கடன் செலுத்த வேண்டியோராவர். (இவர் சாவகச்சேரி முன்னுள் எம். பி. குமாரசாமியின் மனைவியாரின் தந்தையாவர்) டொக்டர் பரமநாயகம் இப்போது உடல்நலமின்மையால் அரசியலைவிட்டு ஒதுங்கி சமயப் பணியில் ஈடுபட்டிருந்தாலும் நாகநாதனுடன் அவர் கொண்ட நட்பின் தீவிரம் தளர்ந்த தில்லை. டொக்டரின் மறைவின் போதுகூட டொக்டருக்குச் சங்கிலித் தோப்பில் சிலை நிறுவ வேண்டுமென அறிக்கையொன்றை இவர் விடுத்திருந்தார்.

## டொக்டர் தர்மர்

நாகநாதனின் இறுக்கமான நண்பர்களில் இன்ஞெருவர் யாழ்ப்பாணம் டொக்டர் தர்மலிங்கம் அவர்களாவார். பண்டைய நாட்தொட்டு கட்சியின் நெருங்கிய உறவினர். கட்சியின் கல்யாண வேளைகளில் தலைப்பாகை கட்டிக் கொண்டு தாம்பூலந் தரிப்பதற்கு அதிகம் வரமாட்டார். இழவு வேளைகளில் இதயபூர்வமாக இரண்டு சொட்டுக் கண்ணீர்விடுவதற்கு வருவார். கட்சி நட்டப்பட்ட நேரத்தில் கட்சியுடன் நெருக்கமாக நிற்கும் நல்ல நண்பர்களில் இவரும் ஒருவர். வாழ்வில் நொந்துவிட்ட நாகநாதனுக்காக மனம் நொந்தவர்; எவ்வளவு உற்சாகத்துடன் கடந்ததேர்தலில் நல்லூர்த்தொகுதியில் நண்பன் நாகநாதனுக்காக உழைத்தாரோ, அவ்வளவு விசுவாசத்துடன் நாகநாதனின் தோல்வியிலும் நன்மைக்கே என்றுஎண்ணியவர். 'நாகநாதனின் இரத்தத்தையெல்லாம் நாங்கள்உறிஞ்சிக் குடிச்சிட்டம். இனியாவது மனுஷனை நிம்மதியாக விடுவம்' என்று கருதியவர். அவ்வப்போது கட்சிப் பணிக்கென இவர் ஆயிரக்கணக்கில் பணம் கொடுத்ததை அறிவேன். டொக்டர் நாகநாதன் யாழ்ப்பாணம் வரும் வேளைகளில் டொக்டர் தர்மலிங்கத்தின் மருந்தகத்திற்கு அவ்வப்போது வருவதுண்டு- ஏதேனும் மருத்துவக் காரணங்களைக் கொண்டும் அரசியற் காரணங்களைக் கொண்டும். யாழ்ப்பாணத்தில் நண்பன்நாகநாதனுக்கு ஏற்பட்ட பொருள் நட்டங்கள் பலவற்றை—சிலவற்றை நாகநாதன் அறியவும் சிலவற்றை அறியாமலும்—டொக்டர் தர்மலிங்கம் ஈடுசெய்ததை அறிவேன். இந்த நட்புணர்வை டொக்டர் நாகநாதன் தமக்கே இயல்பான விதத்தில் எதிரொலிப்பதுண்டு. இத்தொடர்பில் நிகழ்ச்சியொன்றைக் கூறுவேன்.

## ஏதாவது ஊசி:

ஏதோகாரணமாக டொக்டர் தர்மலிங்கத்தின் மருந்தகத்திற்கு வருகிருர் டொக்டர். அங்கு டொக்டர் தர்மலிங்கத்தின் மகள் டொக்டர் (திருமதி) சத்தியமூர்த்தியும் தந்தையாருடன் பணியாற்றுகிருர். இதைக் கண்ட

**—கரிகாலன்—**

நாகநாதன் டொக்டர் தர்மலிங்கத்தைநோக்கி பின்வருமாறு கூறிஞர்: 'டொக்டர், நான் என் பிள்ளைகளில் ஒருவரையாவது டொக்டராக்க விரும்பினேன். அது கைகூடவில்லை. பரவாயில்லை; உங்களுடைய மகள் டொக்டராக இருக்கிருள் என்பதே மகிழ்ச்சியானது. உங்கள் மகள் வேறு என் மகள் வேறல்ல. இந்த உறவுமுறையை உறுதி செய்ய அவள் என் கையில் ஊசி போடட்டும் பார்க்கலாம்' என்றவாறே கையைநீட்டுகிருர்.தர்மர்முறுவலிப்புடன் 'என்ன ஊசி?' என்று கேட்கவும் 'ஏதாவது ஊசி?' என்று கூறிவிடுகிருர் நாகநாதன்.

டொக்டர் தர்மருக்கு நாகநாதனின் நகையுணர்வுகளும் நட்புணர்வுகளும் பரிச்சயமானவைதாம். தம் வேடிக்கைக்கு முடிவுகாட்டாமல் நாகநாதன் நகரமாட்டார் என்பதையும் அறிவார். திருமதி. சத்தியமூர்த்தி டொக்டர் நாகநாதனுக்கு, வெறும் உவர் நீரை ஊசியில் ஏற்றுகிருர். 'வெரிகுட்' என அவரைத் தட்டிக்கொடுத்து ஆசி கூறி விடைபெறுகிருர் நாகநாதன். இந்த வேடிக்கையைச் சுவைத்து நிற்கிருர் டொக்டர் தர்மர்.

## றேமண்ட்ஸ்

டொக்டர்களைப் பற்றிப் பேசுகிறபோது என் நினைவுகள் பஞ்சகொண்ட இராணுவ முகாமை நோக்கி மீண்டும் பறக்கின்றன. அங்கு தடுப்புக்காவலில் கைதிகளைக் கவனிப்பதற்கு இராணுவ டொக்டர் ஒருவர் வருவார். மிகவும் நல்ல மனிதர் அவர். அவர் இடையில் விடுமுறையிற் சென்றுவிடவே, சற்று கர்வியான இன்ஞெருவர் அவருக்குப் பதிலாக வந்தார். டொக்டரின் உடலில் கோளாறுகள் சில ஏற்பட்டிருந்தன. அவற்றுடன் blister bugs என நாங்களாகவே பெயர் சூட்டிவிட்ட இனந்தெரியாத பூச்சி வகையொன்று எல்லோரையும் இரவில் கொட்டிக் காயம் விளைத்துவந்தது. இக் காயங்களுக்குப் பூசப்பட்ட வெள்ளைக் களிம்பு அவர் முகத்தில் குறுக்கும் நெடுக்குமாக அலங்கரித்து நிற்க டொக்டரின் முகம் பார்ப்பதற்கு மிகவும் வேடிக்கையாக இருக்கும். குறிப்பிட்ட கர்வியான டொக்டரிடம் தமது நோய் பற்றி டொக்டர் நாகநாதன் தமது மருத்துவக் கருத்துக்களைக் கூறியது அவருக்குப் பிடிக்கவில்லை. அதஞல் அவரைப் பார்க்க வரும் வேளைகளிலெல்லாம் — ஏன், ஏனையோரைப் பார்க்கும் நேரத்திலும்தான் — முறுவலிக்கமாட்டார்; முகத்தைப் பிணக்களையுடன் 'உம்' மென்று வைத்திருப்பார். இந்த அபூர்வப் பிறவியைப் பற்றி டொக்டர் கூறிச் சிரித்திருக்கிருர். ஒருநாள் ஆத்திரத்தில் அவரிடம் பின்வருமாறு கேட்டார். 'நீங்கள் முன்பு 'றேமண்ட்சில்' வேலை செய்திருக்கிறீர்களா'? என்ருர். பிரேத அடக்கத்திற்கு ஒழுங்கு செய்யும் நிறுவனம் 'றேமண்ட்ஸ்' என்பது தெரிந்ததே. இந்தக் கேள்வியின் அர்த்தம் டொக்டர் கூறித்தான் எனக்கும் புரிந்தது. அந்த இராணுவ டொக்டருக்குப் புரிந்ததோ என்னவோ — முகத்தை 'உர்' ரென்று வைத்தவாறே போய்விட்டார்.

## எழுக! எழுக!

பெரியவருக்கு (தந்தை செல்லா) உடல் நலவின்மையென்ருல் கைகண்ட மருத்துவராக டொக்டர் நாகநாதன் அழைக்கப்படுவதுண்டு. பெரியவருக்கு மருந்து கொடுப்பதைக் காட்டிலும் உற்சாகம் கொடுப்பதிலேயே டொக்டருக்கு நம்பிக்கை போலும். ஏனெனில், அன்ஞெரு நாள் பெரியவருக்கு நலவீனமென டொக்டர் அழைக்கப்பட்டார். பெரியவர் கட்டிலில் படுத்துக்கிடந்தார். பெரியவரைப் பார்வையிட வந்த டொக்டர், நாடி, அழுக்கம், எல்லாவற்றையும் பார்த்துவிட்டுக் கூறிஞர், "ஐயா! உங்களுக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை எழும்புங்கள் ......... எழும்பி நடவுங்கள் ... எழும்புங்கள் (get up ... get up and walk ... come on get up ... )" பெரியவரை எழுப்பாமல் விடமாட்டார் போலிருந்தது. பெரியவரும் முறுவலித்தவாறே எழுந்து நடந்தார். டொக்டர் கொடுத்த ஊஜாரில் பெரியவருக்கும் நலவீனம் விட்டுப் போயிற்று; உடனடியாகத் தெம்பு பெற்றுவிட்டார்.

## தோன்ருத்துணை:

டொக்டர் என்றும் கலவரமடைந்து நான் கண்டதில்லை. ஆஞனப்பட்ட விடயங்களைக்கூட மிகவும் அற்பமாகக் கொள்வார்; நிலைகுலையமாட்டார். தாம் கலவரமடையாமை மட்டுமல்ல, வாழ்க்கைப்படுமுடிச் சில் சிக்கித் திணறுவோருக்கும் கலவரத்தைப் போக்கும் தோன்ருத் துணையாவார். வெம்புகின்ற உள்ளங்களுக்கு டொக்டர் தருகின்ற தெம்பு திடமானது. சோதனைகளின் மத்தியில் டொக்டர் தருகின்ற 'உஜார்' இருக்கிறதே, அது சொல்லித் தெரிய முடியாதது; அனுபவித்து மட்டுமே அறியக்கூடியது.

## கிரிக்கெட் வீரர்:

ஒரு நாள் நல்லூரில் அவரது 'சங்கிலித் தோப்பு' இல்லத்தை நோக்கிச் சிலர் பதறிக்கொண்டே வருகின்றனர். தங்கள் குடும்பத்திலொருவரைக் 'கள்ளத் தோணி' யெனப் பொலிஸார் பிடித்துச் சென்றுவிட்டதாக்கூறக் குய்யோ முறையோ என அரற்றுகின்றனர். அதனைக்கேட்ட டொக்டர் பதறவில்லை. அவரது முகத்தில் அனுதாப உணர்வுகள் எவற்றையும் காணுத அவர்களுக்கும் ஒரே ஏமாற்றம். நிதானமாக ஏதோ பாட்டை முணுமுணுத்தவாறே சட்டையை மாட்டிக் கொண்டு சென்று வண்டியில் ஏறுகிருர். வந்தவர்களும் ஏறிஞேர் பாதி சறுக்கிஞேர் பாதியாக வண்டியின் பின்னிருக்கையில் முண்டியடித்துக் கொண்டு ஏறுகின்றனர். 'பொலிஸ் ஸ்டேசன்' என்று மட்டும் டிரைவரிடம் கூறுகிருர். பொலிஸ் நிலையத்திற்குள் சென்ற டொக்டர் பிடித்துச் செல்லப்பட்டவரை உடன் விடுவித்தது மட்டுமல்ல, தாம் வந்த நோக்கத்தையும் மறந்துபொலிசார் கிரிக்கெட் விளையாடும் நேர்த்தியைச் சுவைத்துக் கொண்டே — நிற்கிருர். பின திடுமென்று மைதானத்துள் சென்று விளையாடிக் கொண்டிருந்தவரிடம் துடுப்பை வாங்கித் தாம் பந்தை அடிக்கத் தலைப்பட்டு விடுகிருர். — வேட்டியை மடித்துக் கட்டியவாறே.

## 17. மருத்துவர் மான்மியம்!

யோ என அரற்றுகின்றனர். அதனைக்கேட்ட டொக்டர் பதறவில்லை. அவரது முகத்தில் அனுதாப உணர்வுகள் எவற்றையும் காணுத அவர்களுக்கும் ஒரே ஏமாற்றம். நிதானமாக ஏதோ பாட்டை முணுமுணுத்தவாறே சட்டையை மாட்டிக் கொண்டு சென்று வண்டியில் ஏறுகிருர். வந்தவர்களும் ஏறிஞேர் பாதி சறுக்கிஞேர் பாதியாக வண்டியின் பின்னிருக்கையில் முண்டியடித்துக் கொண்டு ஏறுகின்றனர். 'பொலிஸ் ஸ்டேசன்' என்று மட்டும் டிரைவரிடம் கூறுகிருர். பொலிஸ் நிலையத்திற்குள் சென்ற டொக்டர் பிடித்துச் செல்லப்பட்டவரை உடன் விடுவித்தது மட்டுமல்ல, தாம் வந்த நோக்கத்தையும் மறந்துபொலிசார் கிரிக்கெட் விளையாடும் நேர்த்தியைச் சுவைத்துக் கொண்டே — நிற்கிருர். பின திடுமென்று மைதானத்துள் சென்று விளையாடிக் கொண்டிருந்தவரிடம் துடுப்பை வாங்கித் தாம் பந்தை அடிக்கத் தலைப்பட்டு விடுகிருர். — வேட்டியை மடித்துக் கட்டியவாறே.

## தடை உடைய......

(Rise to the occasion) 'தேவைக்கேற்ப வளர்தல்' என ஆங்கிலத்தில் சொற்ருெடரொன்று உண்டு. தேவைக்கேற்ப வளரும் தன்மை டொக்டரின் இரத்தத்தில் இரண்டறக் கலந்திருந்தது. இத்தன்மையே இவரின் வலிமையாகவும் இருந்தது. இத்தன்மையின் வலைமையை 1961 ஆம் ஆண்டின் அறப்போரின்போது துலாம்பரமாகக் கண்டோம். 1956ஆம் ஆண்டின் தேர்தல் என நினைக்கிறேன். யாழ்ப்பாணம் கோட்டை முற்றவெளித்திடலில் இறுதிக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது எவரோ முக்கியமான பேச்சாளர் ஒருவர் பேசுவதற்கு இருக்கிருர். இந்நிலையில் நேரம் பத்துமணியாகிவிட்டதென பொலிசார் ஒலிபெருக்கியை நிறுத்திவிட்டனர். எவ்வளவோ முயன்றும் ஒலிபெருக்கியை மேலும் சில நிமிடங்கள் அனுமதிக்க மறுத்து விட்டனர். ஆயிரக்கணக்கில் திரண்டிருந்த கூட்டத்தினர் மத்தியில் ஒரே கொந்தளிப்பு. இந்தச் சந்தடியில் ஒரு காரில் பொலிஸ் நிலையத்திற்கு விரைந்த டொக்டர் நாகநாதனை எவரும் கவனிக்கவில்லை. இச்சேதியை அறிந்த தலைவர் திரு. வன்னியசிங்கம், பொறுத்திருக்குமாறும் டொக்டர் வெற்றியுடன் திரும்புவாரென்றும் கூட்டத்தில் அறிவிக்கிருர். மக்கள் கூட்டத்தில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம். டொக்டர் வெற்றியுடன்தான் திரும்புகிருர்." கூட்டத்தை நடாத்தலாம். ஒலிபெருக்கிக்குத் தடையில்லை" என அறிவிக்கிருர். ஒரே கையொலி வானைப் பிழக்கின்றது.

## வன்னியர் உரை:

ஒலி பெருக்கிக்கு அனுமதி கிடைத்ததல்ல முக்கியமானது. அதனைக் கூட்டத்தில் அறிவித்த அமரர் வன்னியர் தொடர்ந்து கூறியது தான் முக்கியம்.

"நாகநாதனுல் என்ன சாதிக்க முடியும் என்று கேட்கிருர்கள். இந்தச் சாதனையை நிகழ்த்திய அதே சக்தி தமிழரசையும் சாதிக்கும்'' என்று கூறிஞர்.

இன்று வன்னியரும் ஈண்டிலை, டொக்டரும் ஈண்டில்லை. அந்தச் சக்தி இருக்கிறதா? இதைத் தமிழ் மக்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும்.

# ஆங்கில, சிங்கள...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கங்கள் தொடர்ந்து பல முறை தமிழ் மக்களைக் கேட்டிருக்கின்றன. ஆனுல் தமிழ் மக்கள் அசைந்துகொடுப்பதாகத் தெரியவில்லை. தமிழ் பேசும் மக்களின் சிந்தனைத் திறன் மழுங்கிவிட்டதா?

இலங்கைத் தமிழர்களின் ஏகோபித்த இயக்கம் எனப்படும் தமிழரசுக்கட்சிகூட இத்துறையில் தீவிர கவனம் செலுத்தவில்லை என்பதே எனது எண்ணம். தமிழ் மக்களை தமிழ்மொழியில் மட்டுமே தமது செயல்களை நடாத்தும்படி கேட்டுக் கொள்ளும பிரசாரம் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். அவர்கள் தொடர்ந்தும் ஆங்கில மொழியிலேயே தொடர்புகொண்டு வருவார்களானுல் நிச்சயம் சிங்கள ஆதிக்கத்தை தடுக்க முடியாது. தமிழ் அழிவையும் தடுக்கமுடியாது.

எமது மொழி பழைமையானது. சிவபிரானுல் தோற்றுவிக்கப்பட்டது. நாங்கள் ஆங்கிலமொழியில் எமது கருமங்களைச் செய்தாலும், தமிழ் அழியாது என்பது நடைமுறைக்கு ஒத்துவராத விடயம். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பது மொழியைப் பொறுத்தவரையில் பொருந்தாது என்பதை இலங்கை வாழ் தமிழ்பேசும் பெருங்குடியினர் நிச்சயம் நினைவில் வைத்திருக்கவேண்டும்.

இன்று தமிழ் மக்கள் தம் உறவினர்கட்கு அனுப்பும் கடிதங்களைகூட ஆங்கிலத்தில் எழுதுகிருர்கள். ஆங்கிலத்தில் மட்டுமே முகவரியிடுகிருர்கள். இந்த மோகம் எம்மைவிட்டு அகலவேண்டும்; தமிழ்மொழியில முகவரி எழுதினுல் அஞ்சல் போய்ச் சேராதா? எல்லாரும் ஒன்றுகூடி முயன்ருல் எத்தனை தமிழ் இளைஞர்கட்கு புதிதாக வேலை வாய்ப்பளிக்கமுடியும்.

தமிழ் மாகாணங்களில் பேருந்துகளில் பயணம்செய்தால் எம் காதுகளில் கேட்பது நிச்சயம் ஆங்கிலமொழியாகத்தான் இருக்கும். இரண்டு தமிழர்கள் உரையாடுகிருர்கள் ஆங்கிலத்தில்தான். என்னே தமிழனின் மொழிப்பற்று?

தமிழர்கள் வைத்திருக்கும் வியாபார நிறுவனங்களில் பெயர்ப்பலகைகளில் கூடத் தமிழ்மொழிக்கு இடமில்லாத நிலையைக் கண்டு வெதும்பிய சம்பவங்கள் பல. இவர்கள் ஆங்கிலத்துக்கு கொடுத்த முதலிடத்தைத் தமிழுக்குக் கொடுக்க மறுப்பதேன்?

தமிழ்பேசும் மக்கள் அனைவரும் தம்மொழியைப் பற்றியும், தம் இனத்தைப் பற்றியும் பொறுப்புணர்வுடன் சிந்திக்கவேண்டியது இன்றைய காலகட்டத்தில் மிகவும் அத்தியாவசியமானது. சிங்களம் மட்டும் சட்டம் அமுலில் இருக்கும்பொழுதே நாம் எமது மொழியையும் உரிமை பெற்ற மொழியாகச் செய்ய முடியும். தமிழர்கள் அனைவரும் அரசாங்கத்துடனுன சகல தொடர்புகளையும் தமிழில் மட்டுமே வைத்துக் கொள்ளவேண்டும். எல்லாரும் ஒன்றுசேர்ந்து செயலாற்றினுல் அரசாங்கம் நிச்சயம் பணிந்தே தீரும். இதனுல் எண்ணற்ற தமிழ் இளைஞர்கட்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கும். தமிழ்மொழி உயர்ச்சிக்காகப் பாடுபடும் மன்றங்கள் இதுபற்றி தமிழ் மக்களிடம் பிரசாரம் செய்து தமிழ்மொழியிலேயே தமது தொடர்புகளை வைத்துக் கொள்ளும்படி தமிழ் மக்களைத் தூண்டிடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் கருணாநிதி கவிஞராகியது....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களிலே தங்களது முத்திரைகளைப் பதித்து விட்டுப் போயிருக்கிறார்கள். அந்த சமத்காரம் என்பது நண்பர் கலைஞர் அவர்களுக்கு கை வந்த கலையாக இருப்பதனை நான் பார்க்கின்றேன்.

நான் அவரை விட்டுக் கொஞ்ச காலம் பிரிந்ததற்கு அவருக்கு கிடைத்த லாபம் அவர் கவிஞராக மாறியதாகும்.

நான் கூடவேயிருந்திருந்தால் 'இந்த வேலையை இவன் பார்த்துக் கொள்ளட்டும்' என்று இருந்திருப்பார். ஆனால் அந்தப் பிரிவினுடைய விளைவாக அவர் நன்கு சமத்காரமாக பாடுவதற்கு கற்றுக் கொண்டார் என்பதையும் நாம் பார்க்கவேண்டும்.

அறிஞர் அண்ணா அவர்களுக்கு 'சௌமியன்' என்ற புனை பெயர் உண்டு. சௌமிய ஆண்டுக்கு பின்னாலே சாதாரண ஆண்டு வந்தது; அப்போது அவரை (கலைஞரை) கவியரங்கிலே தலைமை வகிக்கச் சொன்ன போது 'சௌமியனுக்குப் பிறகு சாதாரணமான நான் வந்திருக்கிறேன் என்று பாடினார்.

சௌமிய ஆண்டிற்குப் பிறகு சாதாரண ஆண்டு வந்தது போல சௌமியனுக்குப் பிறகு சாதாரணமான நான் வந்திருக்கிறேன் என்று சமத்காரமாகப் பாடினார்.

இப்படி சமத்காரம் பிடிபடுவது ஒரு சிலருக்குத்தான் வரும். அத்தகைய வரிசைகளிலே அவரது கவிதைகள் இடம் பெறும்.

## புதிய மரபுகள்

இந்தக் கவிதைகளுக்குப் புதிய மரபுகள் உண்டு; நாம் பழைய மரபுகளையே பிடித்துத்தொங்கிக்கொண்டிருக்க வேண்டுமானால் இன்னும் நாம் 12-வது நூற்றாண்டிலேயே இருக்க வேண்டும்; இன்னும் கொஞ்சம் முன்னாலேயே போக வேண்டும்!

நானும் பார்க்கின்றேன்று திருவாசகம், நாலாயிரப்பிரபந்தங்கள் போன்ற நூல்களில்கூட இலக்கணம் ஒழுங்காக இருக்கின்றது என்று புலவர்கள் சொல்கிறார்களே தவிர அப்படி இலக்கணம் இருக்கின்ற பல கவிதைகளின் நான் படிக்கின்றபோது எந்த அளவிலே ஓசையோடு படித்தால் அது ஒத்துவரும் என்று பார்க்கிறேன். இதுவரையிலே பல பாடல்கள் ஓசையுடன் இருப்பதாக எனக்குப் புரியவில்லை.

ஆகவே ஓசை ஒத்துவராமலேயே இலக்கணம் ஒழுங்காக இருக்கிறது என்று சொல்வதாலேயுருக்கின்றலாபத்தை விட அந்த ஓசையை நேர் ஓசையாக வைப்பது தான்—ஆங்கிலத்திலே சொல்லப்படும் பிளாங் வெர்ஸ் (Blank verse) அந்தப் பிளாங் வெர்ஸ் என்பதை வசன கவிதை என்று தமிழில் சொல்கிறார்கள்; அதுவல்ல அதன் பொருள்!

வசனம் வேறு; கவிதை வேறு; (Blank verse) பிளாங் வெர்ஸ் என்பதனைச் சொற்கோலம் என்று அழைக்கலாம்.

## சொற் கோலம்

அந்தச் சொற்கோலமாக ஏராளமான விஷயங்களைக் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இதிலே வந்து விழுந்திருக்கின்றவிஷயங்களைக் கொஞ்சம் நீங்கள் உட்கார்ந்துபார்த்தால் இரு பொருள், மூன்று பொருள் கூடக் காணமுடியும். நம்முடைய தமிழர்கள் அதிலே மகா கெட்டிக்காரர்கள்.

ஒரு தடவை நமது நண்பர் கலைஞர் அவர்கள் என்னுடைய கவிதை ஒன்றைப் பற்றி ஒருவருடன் பேசிக் கொண்டு சென்றார்! என் கவிதையல்ல; இசைப்பாடல் ஒன்றைப் பற்றி!

இன்னச் சின்ன ஊரணியாம்; தேன் மணக்கும் சோலைகளாம்! ஊருணியின் அரையில் ஓங்கி நிற்கும் மாமரமாம்! மாமரத்தின் கிளைதனிலே மாடப்புறாக் கூடுகளாம்!

என்று நான் எழுதியிருந்தேன்.

## கலைஞர் கேள்வி

அதைப் படித்து விட்டுக் கலைஞர் கருணாநிதி அவரிடம் சொன்னார்கள். மாமரத்துக் கிளையிலே மாடப்புறா எப்படி கூடு கட்டும்? மாடப்புறா என்பதே மாடத்திலே வாழ்வதாலே வந்தபெயர் தானே மாடப்புறா என்பது? அது எப்படி மாமரத்திலே கூடு கட்டும்! என்று கேட்டார்.

நான் அதை ஒப்புக் கொண்டேன்; சரி! மரபுக்கு மாறாக வந்து இலக்கண ஓசைக்காக வந்த தவறாக இருக்கட்டும் என்று நான் கருதினேன்.

ஆனால் ஒருபத்திரிகையிலே ஒரு ரசிகர் கடிதம் எழுதியிருந்தார்.

கண்ணதாசன் மாமரத்துக் கிளைதனிலே மாடப்புறா கூடு கட்டியதாக எழுதியதற்குக் காரணம் அந்தக் கதையினுடைய கருவாகும்.

அந்தக் கதையிலே மாடத்தில் வளர வேண்டிய பிள்ளை மாமரத்தடியிலே வளர்கிறது மாமரத்தடியிலே வளர வேண்டிய பிள்ளை மாடத்திலே வளர்கிறது. அதனாலே தான் மாமரத்துக் கிளைதனிலே மாடப்புறாக் கூடுகளாம் என்று அவர் பாடினார் என்று எழுதியிருந்தார்.

என்னைக் கேட்டார்கள். இதுவும் சரிதான் என்று நான் சொன்னேன்.

கம்பனைப் படிக்கும்போது எனக்கு எழுந்த ஐயம் பற்றி கல்விக் கடல் என்று சொல்லக்கூடிய திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களிடத்திலே கேட்டேன். அவர் சொன்னார். ஆண்களுடைய கண்களை தாமரைக் கண் என்றும், பெண்களுடைய கண்களைத்தான் குவளைக்கண் என்றும் வர்ணிக்க வேண்டும் என்றார்.

பெண்களுடைய கண்களுக்கு தாமரையை குறிப்பிட்டு வர்ணிப்பது அவர்களுடைய குணத்திற்கும், ஒழுக்கத்திற்கும் மாசு கற்பிப்பதாகும்.

## தாமரையும் தாம் அரையும்

தாமரை சிவந்திருக்கும். பெண்களுடைய கண் சிவந்திருக்கிறது என்றால் ஒன்று அவள் குடித்திருக்க வேண்டும். இல்லையேல் காமநயத்திலே அதிகம் ஈடுபட்டிருக்க வேண்டும். இந்த இரண்டும் தவிர கண் சிவப்பதற்கு வேறு காரணம்கிடையாது. ஆகவே தாமரைக் கண் என்று சொல்லக்கூடாது என்று அவர் சொன்னார்.

நான் கேட்டேன்: கம்பன் மட்டும் சொல்லுகிறானே! ராமன் தெருவிலே வந்த போது பெண்கள் எல்லாம் தாமரை கண்ணால் நோக்கியதாகச் சொல்லுகிறானே; அவன் மட்டும் சொல்லலாமா? அப்படி என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள்;

இல்லை! கம்பன் மகாகவி அவன் தவறு செய்ய மாட்டான் என்ற எண்ணத்தோடு படிக்க வேண்டும்;

ராமன் தெருவிலே வருகிற போது பெண்கள் எல்லாம் தாமரைக் கண்ணோடு நோக்கினார்கள். என்றால் தாமரைக் கண் என்று அர்த்தம் அல்ல; தாம்—அரைக் கண்ணினால் நோக்க என்று தான் சொன்னார். அதற்கு அது தான் பொருள் என்று அவர் சொன்னார்.

கலைஞர் கருணாநிதியினுடைய இந்தத் தொகுப்பினைப் படிக்கும் போதுகூட எங்காவது தவறு தோன்றினால் அதற்கு உள்ளே வேறு ஏதோ அர்த்தம் இருக்கிறது என்ற எண்ணத்தோடேயே படிக்க வேண்டும்.

ஆகவே இந்தத் தொகுப்பிலே இருக்கின்ற சமத்காரத்தை எடுத்து வைத்துக் கொண்டு பார்த்தாலே பழங் கவிதைகளிலே இருக்கின்ற அந்த நயம் தெரியும்.

---

# முக்கூட்டு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சலிபில, சலுசல, ஜாதிக சம்பத போன்ற எண்ணற்ற சொற்கள் தமிழ்ப் பேசும் மக்களுக்கு இரத்த அமுக்கத்தைக் (Blood Pressure) கொண்டு வந்துவிடும் போலிருக்கின்றது. குமாரசூரியர், ஆனந்தசங்கரி, அருளம்பலம், வி. (மூல்) பொன்னம்பலம், தியாகராசா, துரோசுப்பா, ராஜன் செல்வநாயகம் போன்றோருக்கு இரத்த அமுக்கம் இல்லை. அதுவராது ஏனெனில் அவர்களெல்லோரும் த. பே. மக்களின் உணர்ச்சி அமுக்கத்தால் படாதபாடுபடுகிறார்கள்.

தமிழரசுக்கட்சிக்காரனின் இன உணர்வுதான், காட்டிக் கொடுப்போர்களுக்கு 'காய கல்பமாக' இருக்கிறது. தமிழரசுக்கட்சிக்காரனின் விடுதலை வேகம் ஓங்க, கிளிநொச்சியில் சங்கரன் படாதபாடு படுகிறார். முக்கூட்டு முன்னணி அரசாங்கம் வாழ்க்கைச் செலவைக் கூட்டுவதில் கடைசியாக பெருஞ்சாதனையை நிலைநாட்டிவிட்டது: பலூன் ஓரளவுக்குத்தான் ஊதும். கூடினால் 'டமார்' மக்கள் பொறுமையும் ஓரளவுக்குத்தான். இன்றைய அரசாங்கம் விரைவில் இதை உணர்ந்தால் மிகவும் நல்லது.

# ஏமாறச்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

விளம்பரமில்லாத கல்யாணம் அதுதான் ஒரு குறை;"

இருவரும் விலகிச் சென்றனர்;

அவமான முத்திரையை நெஞ்சத்தில் தாங்கிய மகேசன் சிலையாக நின்று விட்டான்.

"கெதியாக ஓடி வாருங்கள்!" என்ற செல்லத்தின் குரல் கேட்டு உணர்வு பெற்று ஓடினான். "தங்கச்சி போய் விட்டாயா" என்று ராசத்தின் முகத்தோடு முகத்தை மோதிக் கொண்டிருந்தாள் செல்லம்.

"செல்லம் அழாதே அவள் ஆத்மா சாந்தி பெறட்டும்" என்ற மகேசன் மீண்டும் கிலையானான். அமைதி நிலவியது. இரவிலே மணம் பரப்பிய "நைட்குயின் பூமரக்கூடச் என்று நின்றது. காற்றின் அசைவேயில்லை. இருந்தாற் போலிருந்து எதிர் வீட்டில் ஒலிபெருக்கி அலறத் தொடங்கியது. அதிலிருந்து கிளம்பிய "ஏமாறச் சொன்னது நானோ! என்மீது கோபந்தானோ?" என்னும் இனிமைப் பாடல் விண்ணதிர ஒலித்துக் கொண்டேயிருந்தது.

(யாவும் கற்பனை)

# புதிய...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யலாமா? தமிழினமே பதில் கூறு. இல்லை, இல்லை, ஒருபோதும் செய்யக்கூடாது. எனவே நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கை யாது? அதுவே நான் மேலே கூறிய ஒத்துழையாமையாகும். அதையும் ஓர் பூரணமான முறையிலும் எமது நிலைமையை உலகறியச் செய்யும் வகையிலும்இலகுவானதுமான ஒரு முறை இதோ—

## கறுப்புக்கொடி பறக்கட்டும்

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரும் ஸ்ரீ லங்கா பௌத்த சிங்களக் குடியரசாகும் தினத்தன்று தத்தமது வீடுகளில் எமது அடிமை நிலையின் சின்னமாக கொந்தளிக்கும் விடுதலை உணர்ச்சியின் பிரதிபலிப்பாக கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடட்டும். வடக்கிலும், கிழக்கிலும், மலையகத்திலுமுள்ள தமிழ் பேசும் மக்களின் வீடுகள் அனைத்திலும் கறுப்புக் கொடிகள் வானளாவப் பறந்து எமது எதிர்ப்பைத் தெரிவிக்கட்டும்! றோட்டில் கட்டினால் பொலீஸ்படை அதை அப்புறப்படுத்தலாம். வீட்டில் பறக்கவிடுவதை யாரும் தடுக்கமுடியாது. இது இலகுவாகச் செய்யக்கூடிய சிறந்த முறையாகும். வடக்கும், கிழக்கும், மலையகமும் கறுப்புக் கொடிகள் மயமாகட்டும். லட்சக் கணக்கான கறுப்புக்கொடிகள் தமிழகத்தை சோகப்படுத்தட்டும். என்று தமிழன்னையின் அடிமைத்தளை அகற்றப்படுகின்றதோ அன்றைக்குத்தான் என் வீட்டில் நான் ஏற்றிய கறுப்புக்கொடியை இறக்குவேன் என ஒவ்வொரு காலை துயிலெழும் பொழுதும் வீட்டிலுள்ள சிறு குழந்தை முதல் முதியோர் வரை சகலரது கண்ணிலும் அக்கறுப்புக் கொடி பட்டு எமது அடிமைத்தனத்தை ஞாபகப் படுத்தட்டும். காலை எழுந்ததும் தமிழன்னையின் அடிமைத்தனத்தை நினைவு படுத்தி விடுதலை நோக்கி விரைவாக முன்னேறு என்று எம்மை உற்சாகப்படுத்தட்டும். நாமும் தொடர்ந்து விடுதலையை நோக்கி விரைவோம்.

இந்த ஏற்பாட்டை நிறைவேற்றுவதற்கு தமிழரசுக் கட்சியும், கிளைகளும் முன்வரல் வேண்டும். மக்களிடையே எல்லா வழிகளிலும் பிரச்சாரம் செய்ய வேண்டும். நடைபெறப்போகும் கிளிநொச்சி மகாநாட்டிலும் சரி, வல்வை மகாநாட்டிலும் சரி மக்களை இதைக் கட்டாயம் செய்யுமாறு வற்புறுத்த வேண்டும். கிளைகளும் கிராமந்தோறும் பிரச்சாரம் செய்து மக்களுக்கு அவர்களின் அடிமை நிலையை விளங்கப்படுத்தி அவர்களை தத்தமது வீட்டில் கறுப்புக் கொடி ஏற்றிடச் செய்வதில் கவனம் செலுத்தவேண்டும்.

எனவே லட்சக்கணக்கான கறுப்புக் கொடிகள் பறக்கட்டும்: அதைக்கண்டு ஆட்சியாளர் நடுங்கட்டும். தமிழ்த் துரோகிகள் தொலையட்டும். பிறநாடுகள் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் அடிமை நிலையை அறியட்டும்.

# எஸ். பொ. விளக்கம்

'சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் சின்னத்தனம் எனும் தலைப்பில் 19-12-71ல் சுதந்திரனில் வெளிவந்திருந்த செய்தியையொட்டி திரு. எஸ். பொன்னுத்துரை ஓர் விளக்கம் அனுப்பியுள்ளார்.

அவ்விளக்கத்தில், சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் ஒழுங்குவிதிகள் தனியே தம்மால் தயாரிக்கப்பட்டதல்லவென்றும், அதைத் தயாரித்தது படித்தவர்கள் ஐவரைக்கொண்ட ஒரு குழு என்றும் அக் குழுவில் தாமும் ஓர் உறுப்பினர் என்றும், ஆங்கிலத்தில் இருந்த மேற்படி ஒழுங்குவிதிகளுக்கு தாம் தமிழில் மொழி பெயர்ப்பு கொடுத்ததாகவும் திரு. எஸ். பொ. தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள இலங்கை துரோகம் இழைத்துவிட்டது!

'தன்னைப் போன்ற பெண்ணை இந்திராகாந்தி பிரதமராகவுள்ள நாடு என்பதனையும் மறந்து, இந்தியாவுக்கு எதிராக நடந்து கொண்டு விட்டார் இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா;

'இந்தலட்சணத்தில்இலங்கையில் நடப்பதுமுற்போக்கு இடதுசாரி ஆட்சியாம்!

'இலங்கையின் துரோகத்துக்குக் காரணம் என்ன? அதைப் புரிந்துகொள்வதே கஷ்டமாக இருக்கிறது. ஒருகால், யாழ்ப்பாணம் — மட்டக்களப்பு தமிழர்களின் மாநில சுயாட்சிக் கிளர்ச்சியை கிழக்கு வங்கப் பிரச்சினை போன்றதாகக் கருதி, இன்று வங்க தேசத்துக்குக் கை கொடுத்த பாரதம், நாளை இலங்கைத் தமிழருக்கும் கை கொடுத்து விட்டால் என்ன செய்வது?— என்று இலங்கைப் பிரதமர் அஞ்சுகிறார் போலும்!

'அதனால், 'கிழக்கு வங்கப் பிரச்சினை பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சினை' என்று வாதாடும் அமெரிக்காவுடன் இப்போதே சேர்ந்து கொண்டால், நாளை 'யாழ்ப்பாணம் — மட்டக்களப்புத் தமிழர் பிரச்சினையும் இலங்கையின் சொந்த விஷயம்' என்று சொல்லிவிடலாம் என்று பண்டாரநாயக்கா முன்னெச்சரிக்கையுடன் செயல்படுகிறார் போலும்!

"இந்தியாவுக்கு நாடு பிடிக்கும் நோக்கம் கிடையாது என்பதனை பண்டாரநாயகா மறந்தார் போலும்!

'அமெரிக்க, சீன நாடுகளை நம்பி ஆட்டம்போட்ட யாகியாகானின் கதியைப்பார்த்த பின்னருமா, இலங்கைக்குப் புத்திவரவில்லை!

—சிலம்புச்செல்வர் ம. பொ. சி. 'செங்கோல்' தலையங்கத்தில் (19-12-71)

---

இதை தமிழ் பேசும் மக்கள் காலதாமதமின்றிச் செய்யட்டும். ஒரு புறம் ஒத்துழையாமையைக் கடைப்பிடித்துக் கொண்டு மறுபுறம் பொருளாதார அபிவிருத்தி செய்துகொண்டுதான் அதற்கடுத்த நடவடிக்கையைச் சிந்திக்கலாம்.

யோகக்கலை

"கோடிகோடி பொன்னைத் தேடிக் குவித்தாலும்
கோடிகோடி கோட்டை கட்டினாலும்
வீடு பிணியுள்ள யாக்கையைப் பெற்றிடில்
மேன்மையொன்றுமில்லை ஞானப் பெண்ணே".
—தேகப்பயிற்சி.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி யோகக்கலை என்ற புத்தகத்தையும், புதுவருடக் கலண்டரையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது




தைப்பொங்கல் வெளியீடு

சினிமாஸ் திரைகளில்

தமிழ் நாட்டின் 1970ம் ஆண்டின் சிறந்த சித்திரத்தில் முதல் பரிசும் சிறந்த கதை வசன கர்தாவின் பரிசும் பெற்ற சித்திரம்.

சிவாஜி, பத்மினி
ஸ்ரீகாந்த், நாகேஷ், ராகவன்,
தங்கவேலு ரமாபிரபா
— நடித்த —
சிவாஜி பிலிம்ஸ்

# வியட்நாம் வீடு

9வது கடைசி வாரம்

கெப்பிட்டல்


எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நம்பியார் அசோகன்
முத்துராமன் சோ
நடித்த

# என் அண்ணன்

(ஈஸ்மன் கலர்)

---

புதுவருட வாழ்த்துக்கள்



3வது வெற்றி வாரமாக

சென்ட்ரல் (மருதானை) ரரணி (யாழ்நகர்)

நடிகர் திலகத்தின் 150வது வெற்றிச் சித்திரம்
சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார்
விஜயகுமாரி, முத்துராமன், டி.கே.பகவதி
வி. எஸ். ராகவன் நடிக்கும்

(ஈஸ்மன் கலர்)

# சவாலே சமாளி

---

சிலோன் தியேட்டர்ஸாரின் புதுவருட வாழ்த்துக்கள்

# இப்பொழுது காட்சி தருகின்றது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) | நெல்சன் (திருமலை) | இம்பீரியல் (மட்டுநகர்)

சிவாஜிகணேசன், ஜெயலலிதா, நாகேஷ்,

மற்றும் பலர் நடித்த

# சுமதி என் சுந்தரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1972-ம் வருடம் ஜனவரி மாதம்9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்